வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 22.02.2025 சனிக்கிழமை இதழ் : 53 பக்கங்கள் : 12

# வடக்கு மாகாண மக்களுக்கு நாமே நிரந்தரமானவர்கள்!

## இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி



யாழ்ப்பாணம், பெப்ரவரி 22

வடக்கு மக்களுக்கு நாங்களே நிரந்தரமானவர்கள். ஏனைய நாடுகளைப் போன்று தங்களுடைய மக்களின் நலனுக்காகவோ அல்லது பொருளாதார ஒத்துழைப்புக்காகவோ நாங்கள் தூதரகத்தை ஆரம்பிக்கவில்லை. முழுமையாக உங்களுக்காகவே (வடக்கு மக்கள்) யாழ்ப்பாணத்தில் துணைத் தூதரகத்தை 2010இல் ஆரம்பித்தோம் - இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி தெரிவித்துள்ளார். 11

## புதிய அரசமைப்பு விவகாரம் உரிய நேரத்தில் பேசுவோம்!

கஜேந்திரகுமாருக்கு தமிழ் அரசு பதில் கடிதம்!

யாழ்ப்பாணம், பெப். 22

“புதிய அரசமைப்பு, இனப் பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் பாராளுமன்றத்தில் கூட்டாக செயல்படுவது தொடர்பில் உரியநேரம் வரும்போது கலந்துரையாடலாம்”, என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம்.

புதிய அரசமைப்பு, இனப் பிரச்னை தீர்வு தொடர்பில் பாராளுமன்றத்தில் இணைந்து செயல்படுவது தொடர்பாக தமிழ்த் தேசிய 11

## மார்ச் மாதத்தின் பல நாட்களில் வடக்கு, கிழக்கில் பரவலாக மழை!

யாழ்ப்பாணம், பெப். 22

மார்ச் மாதத்தின் பல நாட்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பரவலாக மழை கிடைக்க வாய்ப்புள்ளது என்று யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளரும் வானிலை அவதானிப்பாளருமான நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

மேலும், வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென் கிழக்கு பகுதியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இதன் காரணமாக நாளை முதல் எதிர்வரும் மார்ச் 2ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. 11

## இந்திய மீனவர்களை கண்டித்து வியாழனன்று யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 22

எல்லை தாண்டும் இந்திய இழுவை படகுகளை தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி எதிர்வரும் வியாழக்கிழமை யாழ். நகரில் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. தீவக கடற்றொழில் அமைப்பு இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அந்த அமைப்பினர் தெரிவித்தவை வருமாறு,

இந்திய மீனவரின் சட்டவிரோத இழுவைமடி தொழில் நடவடிக்கையானது யாழ்ப்பாணத்தில் 11

## சீன அமைச்சர் தலைமையிலான உயர்மட்ட குழு யாழ். வருகின்றது

கொழும்பு, பெப். 22

சீனாவின் நல்லிணக்கம் மற்றும் இன விவகாரங்களுக்கான அமைச்சர் பான் யூ தலைமையில் உயர்மட்ட குழு ஒன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை ஐந்து நாள் பயணமாக இலங்கை வரும் இந்தக் குழு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்டவர்களை சந்தித்துப் பேசவுள்ளது.

தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கும் கண்டி மாவட்டத்துக்கும் இந்தக் குழு வருகை தரவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சீன 11

## கொலை சந்தேகநபரின் படங்கள் ஏ. ஐ. மூலமாக திருத்தப்பட்டவை!

பொது பாதுகாப்பு அமைச்சர் சொல்கிறார்



கொழும்பு, பெப். 22

புதுக்கடை நீதிமன்றில் துப்பாக்கிச்சூடு நடத்திய கொலை சந்தேகநபர் கைது செய்யப்பட்டபோது எடுக்கப்பட்டதாக சமூகவலைத்தளங்களில் பகிரப்பட்ட சில படங்கள் ஏ. ஐ. தொழில்நுட்பத்தை பயன்படுத்தி திருத்தி வடிவமைக்கப்பட்டவை என்று கூறியுள்ளார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால. 11

## பேரருட்திரு ஞானப்பிரகாசம் இன்று மன்னார் ஆயராக பதவியேற்கிறார்!



மன்னார், பெப். 22

மன்னார் மறை மாவட்ட ஆயராக அந்தோனிப் பிள்ளை ஞானப்பிரகாசம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பதவியேற்கவுள்ளார். இவரை ஆயராக திருநிலைப்படுத்தும் நிகழ்வு மடு அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் மன்னார் ஆயராக பதவியேற்கும் பேரருட்திரு அ. ஞானப்பிரகாசம் மன்னார் மறை மாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு யோசப் 11

## வாய் புற்றுநோயால் நாட்டில் நாளாந்தம் 3 - 4 பேர் மரணம்!

கொழும்பு, பெப். 22

நாட்டில் நாளொன்றுக்கு 3 முதல் 4 பேர் வரை வாய் புற்றுநோயால் உயிரிழக்கின்றனர் என வாய் புற்றுநோய் மருத்துவ நிபுணர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாட்டில் ஆண்களிடையே பரவும் புற்று நோய்களில் வாய் புற்று முதலிடத்தில் உள்ளது. ஆண்டுக்கு 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் பேருக்கும் அதிகமானோர் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

அவருடைய விளக்கத்தின்படி, வாய் 11

## மக்களின் ஆணைக்கு அநுர துரோகம் இழைத்துவிட்டார்!

எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, பெப். 22

ஜனாதிபதி தேர்தல் மேடையில் கூறிய அனைத்து விடயங்களையும் மறந்துவிட்டு ரணில் விக்கிரமசிங்கவால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை அவ்வாறே பின்பற்றி மக்கள் ஆணைக்கு துரோகம் இழைத்து, மக்களை ஏமாற்றியுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார் 11

## கொழும்பில் துப்பாக்கி சூடு; ஒருவர் மரணம்

கொழும்பு, பெப். 22

கொழும்பில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பு - கொட்டாஞ்சேனை - கல்பொத்த சந்தியில் இந்தத் துப் பாக்கிச்சூட்டுச் சம்பவம் 11

## வடக்குக்கான நிதியை யாழில் முடக்காது! வன்னி மாவட்டத்துக்கும் வழங்கவேண்டும்!

செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

கொழும்பு, பெப். 22

வரவு - செலவு திட்டத்தில் வடக்குக்கு ஒதுக்கப்படும் நிதி, யாழ். மாவட்டத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் வன்னிக்கும் வரவேண்டும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வரவு - செலவு திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “வெளி நாட்டு தூதுவர்களாக இருக்கலாம், அமைச்சர்களாக இருக்கலாம், ஜனாதிபதியாக இருக்கலாம். வடக்குக்கென வரும்போது யாழ்ப்பாணத்தில்தான் 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா ஓயாவிலிருந்து சேமிப்பு மின் திட்டம் விரைவில் ஆரம்பம்!

கொழும்பு, பெப். 22

நாட்டின் முதல் நீர் மின்கலமான மஹா ஓயாவிலிருந்து பிரித்து எடுக்கப்படும் சேமிப்பு மின் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இலங்கை மின்சார சபை தயாராகியுள்ளது.

மொத்தம் 600 மெகாவாற் திறன் கொண்ட இந்த திட்டம், சூரிய மற்றும் காற்றாலை மின்சாரத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை சேமித்து, தேவை அதிகரிக்கும் போது அதை மீண்டும் மின்கட்டமைப்புக்கு வழங்கும்.

இந்த திட்டம் ஒரு பெரிய அளவிலான எரிசக்தி சேமிப்பு அமைப்பாகும், இது அரநாயக்க மற்றும் நாவலப்பிட்டி பகுதிகளில் அமைந்துள்ள இரண்டு நீர்த்தேக்கங்களை 2.5 கிலோ மீற்றர் சுரங்கப்பாதையுடன் இணைப்பதன் மூலம் செயல்படும்.

பிரகாசமான பசுமை எரிசக்தி எதிர்காலத்தை நோக்கிய இலங்கையின் பயணத்துக்கு ஆதரவளிக்குமாறு இலங்கை மின்சார சபை பங்குதாரர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

# மித்தெனிய மூவர் கொலை; 3 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, பெப். 22

தங்காலை - மித்தெனிய - கடவத்தை சந்தியில் தந்தை மற்றும் அவரின் இரண்டு பிள்ளைகள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் அடங்குவதாக அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த 18 ஆம் திகதி நடந்த துப்பாக்கிச் சூட்டில் 39 வயது தந்தை, அவரது 6 வயது மகள் மற்றும் 7 வயது மகன் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

டுபாயை தளமாகக் கொண்ட ஒரு குற்றக் கும்பலைச் சேர்ந்த ஒருவரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது விசாரணையில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எதிர்க்கட்சி தலைவர் சஜித்துடன் அமெரிக்க தூதுவர் ஜூலி சந்திப்பு



கொழும்பு, பெப். 22

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு, நேற்று முன்தினம் பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

சுமார் ஒரு மணித்தியாலம் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாகவும் இது தொடர்பில் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில், "எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் சிறந்த கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

அமெரிக்க - இலங்கை உறவு நமது இரு நாடுகளையும் எவ்வாறு பலப்படுத்துகிறது என்பது பற்றி கலந்துரையாடப்பட்டது. "எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

கொழும்பு, பெப். 22

நாட்டில் தற்போது நில வும் வரட்சியான வானிலை காரணமாக நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

நிலவும் வரட்சியான வானிலையினால் நீரின் பயன்பாடு அதிகரித்துள் ளது. எனவே, அன்றாட பயன்பாட்டிற்கு போதுமான நீரை சேமித்து, சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# விபத்தில் பெண் படுகாயம்!

வவுனியா, பெப். 22

வவுனியா - மன்னார் வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்தார் என்று நெளுக்குளம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள வேப்பங்குளம் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்பிய டிப்பர் வாகனம் ஒன்று வீதியில் ஏற முற்பட்ட போது நகரில் இருந்து வேப்பங்குளம் 8 ஆம் ஒழுங்கையில் திரும்ப முற்பட்ட மோட்டர் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சட்டவிரோத மீன்பிடி; 17 மீனவர்கள் கைது!

முல்லைத்தீவு, பெப். 22

வெடிமருந்துகளை பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடித்தல், செல்லுபடியாகாத மீன்பிடி பத்திரத்துடன் சட்டவிரோத மீன்பிடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடித்தல் மற்றும் இரவு நேர சுழியோடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 17 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரால் கடந்த 13 முதல் 19 வரை கொக்கடி, நந்திக்கடல், முல்லைத்தீவு, ஆனவாசல், சின்னபாடு மற்றும் கடைக்காடு ஆகிய கடற்பரப்புகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து, 12 மீன்பிடி படகுகள், மோட்டார் சைக்கிளொன்று மற்றும் 156 சட்டவிரோத மீன்பிடி வலைகள், 184 கடலட்டைகள் மற்றும் 22 சங்குகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இலங்கைக்கு சொந்தமான கடல் மற்றும் கரையோர வலயத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை ஒடுக்கும் வகையில், சட்டபூர்வ மீன்பிடி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் கடற்படையினர் தொடர்ந்து கண்காணித்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் போது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 18 முதல் 58 வயதுக்குட்பட்ட முல்லைத்தீவு, புத்தளம், கல்பிட்டி, கொட்டாந்தீவு, தோப்பூர் மற்றும் முள்ளியான் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் ஆவர். (ஐ)

# யாழ். மருத்துவமனைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச மருத்துவமனைகளிலும் நிலவிவரும் மருத்து சேவை ஊழியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு சுகாதார அமைச்சால் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச மருத்துவமனைகளில் காணப்படும் மனிதவள தேவைகளை இனங்கண்டு, அவற்றிற்கு உரிய தீர்வுகளை பெற்று தரும் நோக்குடன் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் விசேட கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, ஊர்காவற்றுறை பொது மருத்துவமனை, வேலணை மாவட்ட மருத்துவமனை, வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம், யாழ். போதனா வைத்தியசாலை, சாவகச்சேரி பொது வைத்தியசாலை மற்றும் மாங்குளம் பொது வைத்திய சாலை ஆகியவற்றில் மனித மற்றும் பௌதிக வளங்களில் உள்ள குறைபாடுகள் தொடர் பில் ஆராயப்பட்டதாக சுகா தார அமைச்சு தெரிவித்துள் ளது.

மேலும், யாழ். மக்களை பாதிக்கக் கூடிய தொற்றா நோய்கள், தொற்று நோய்களை கட்டுப்படுத்தல், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு வேலைத் திட்டத்தை ஆரம்பித்தல் மற்றும் வைத்தியசாலைக்கு அவசியமான மருந்துப் பொருட்கள் தொடர்பிலும் வைத்தியசாலை நிர்வாக அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது சுகாதார பணிப்பாளர்,

தீர்வைப் பெற்றுதரக் கூடிய சிக்கல்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்ததுடன், சுகாதார அமைச்சரிடம் தெரிவித்து ஏனைய பிரச்னைகளுக்கான தீர்வுகளும் வழங்கப்படும் - என்றார். (ஐ)

# வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்ட ஆண்டு விழா!

வவுனியா, பெப். 22

வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டம் 28 ஆண்டுகள் நிறைவு விழா, பேராசிரியர் கந்தையா சிறீ கணேசனுக்கான விசேட கௌரவிப்பு மாருதம் இதழ் - 22 வெளியீடு என்பன இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் தமிழ் மணி அகளங்கன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழக மேனாள் துணை வேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி கலாநிதி கு. கமலகுமார், வவுனியா பிரதேச செயலாளர் இ. பிர தாபன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த. முகுந்தன், யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி மேனாள் பீடாதிபதி சு. பர மானந்தம், வவுனியா சேதிய கல்வியியல் கல்லூரி மேனாள் உபபீடாதிபதி பொ. சத்தியநாதன், வவுனியா தேசிய கல்வியியல் கல் லூரி மேனாள் மூத்த விரிவுரையாளர் மிக்கேல் சூசைதாசன், மேனாள் கோட்ட கல்வி பணிப்பாளர் எம். பி. நடராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

# மனைப்பொருளியல் கண்காட்சி



யாழ்ப்பாணம், பெப். 22

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை மற்றும் மனைப்பொருளியல் கண்காட்சி எமது பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக திருமதி. கஜானி பார்த்தீபன் (பணிப்பாளர், கிராம அபிவிருத்தி திணைக்களம், வடக்கு மாகாணம்), சிறப்பு விருந் தினராக திருமதி சுனேத்திரா சுதாகர் (மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.), கௌரவ விருந்தினர்களாக இரவீந்திரசர்மா கிரிதரன் (முகாமையாளர், இலங்கை வங்கி, மானிப்பாய்), திரு.லயன்.வடலியூர். இரா. சரவணன் (சமாதான நீதிவான், சமூக செயல்பாட்டாளர்) ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
22.02.2025 சனிக்கிழமை
பிலவ வருடம், மாசி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எது வடக்கு மக்களின் உண்மையான தேவை?

தையிட்டி விகாரையை முன்வைத்து மதவாதம் மற்றும் இனவாதத்தை தூண்டுவதற்கு சிலர் முயற்சிப்பதான குற்றச்சாட்டுக்கு ஜனாதிபதி அநுரகுமார வழங்கியிருக்கும் பதிலை எவ்வாறு புரிந்துகொள்வது? "குறுகிய அரசியல் இலாபங்களுக்காக மதவாதம் மற்றும் இனவாதத்தைத் தூண்டுவதை அனுமதிக்க முடியாது", என்று குறிப்பிட்டிருக்கும் ஜனாதிபதி, வடக்கு மக்களின் உண்மையான தேவைகளுக்கு அமைவாக பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார் - வடக்கு மக்களின் உண்மையான பிரச்னை என்பதால் அவர் குறிப்பிட முற்படுவது என்ன?

கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஆதரித்திருந்தனர். இதனை ஒரு வரலாற்று மாற்றமாகவே அநுரகுமாரவும் அவரின் அரசாங்கமும் கருதுகின்றது. ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதனை வரலாற்று மாற்றமாகவும் தமிழ் மக்கள் இனவாத அரசியலிலிருந்து வெளியில் வந்திருக்கின்றனர் எனவும் பேசிவருகின்றார்.

தமிழ் மக்கள் இனவாதத்திலிருந்து வெளியில் வந்திருக்கின்றனர் என்பதன் மூலம் இதுவரையில் தமிழ் மக்களை முன்வைத்து மேற்கொள்ளப்பட்ட அரசியல் நகர்வுகளையே அவர் இனவாத அரசியல் என்று குறிப்பிட்ட முற்படுகின்றார். இராமலிங்கம் சந்திரசேகரனும் அண்மையில், வடக்கு அரசியல்வாதிகளால்தான் தமிழ் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

இதன் மூலம் அரசாங்கத்தின் தமிழர் பிரச்னை தொடர்பான கொள்கை நிலைப்பாடு தெளிவாகவே தெரிகின்றது - அதாவது, தமிழ் மக்கள் தங்களுடைய அரசாங்கத்தை ஆதரிக்கின்றனர் - எதிர்காலத்தில் இன்னும் அதிகமாக ஆதரிக்கவுள்ளனர், இந்த நிலையில் வடக்கு மக்களின் பிரச்னை என்பது, தமிழ் அரசியல்வாதிகள் கூறுகின்ற விடயங்கள் அல்ல - மக்களின் உண்மையான பிரச்னை என்பதும் அரசியல்வாதிகளின் பிரச்னை என்பதும் வேறு.

கோட்டாபய ராஜபக்ஷவும் இவ்வாறானதொரு பார்வையையே முன்வைத்திருந்தார். அவர் அரசியல் விடயங்களின் நெளிவுசுழிவுகளை அறியாமல் வெளிப்படையாக பேசியிருந்தார் - அதாவது, வடக்கில் தமிழ் மக்களின் பிரச்னை பொருளாதாரப் பிரச்னையே தவிர, அரசியல் பிரச்னையில்லை - தமிழ் மக்களுக்கு என்று பிரத்தியேக அரசியல் பிரச்னை என்று ஒன்றில்லை - அவ்வாறு இருப்பதாக அரசியல்வாதிகள்தான் கூறிவருகின்றனர்.

ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதனை நிதானமாகவும் தூரநோக்குடனும் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறும் முன்னெடுக்க முயற்சிக்கின்றது. இந்த நிலையில்தான் வடக்கு மக்களின் உண்மையான தேவைகளின் அடிப்படையில் பிரச்னைகள் தீர்க்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்றார். அவர் உண்மையில் கூறுவது வடக்கு மக்கள் இப்போது தையிட்டியை முன்வைத்து பேசப்படும் அரசியலோடு இல்லை - அவர்களின் பிரச்னை வேறு. அந்த உண்மையான பிரச்னைகளை தனது அரசாங்கம் கருத்தில் கொள்ளும்.

அனைத்து விடயங்களுமே, கடந்த பொதுத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டுதான் உரையாடப்படுகின்றது. ஒருவகையில் அது சரியும்கூட - ஏனெனில், இன்று தையிட்டியை அகற்ற வேண்டும் என்று கூறும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சியுடன் வடக்கு மக்கள் நிற்கவில்லை. எனவே, இதனை எதிர்கொள்ள வேண்டுமாயின் தமிழ் கட்சிகள் தங்களின் ஜனநாயக வலுவை உள்ளூராட்சி தேர்தல் மூலம் நிரூபிக்க வேண்டும். ஓரளவுக்கு தமிழ் கட்சிகளுக்கு அது மீளவும் ஒரு குரலை வழங்கும்.

# சஞ்சீவ கொலை வழக்கில் கைதான பொலிஸ் அதிகாரிக்கு விளக்கமறியல்!

கொழும்பு, பெப். 22

கொழும்பு - புதுக்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த புதன்கிழமை பாதாள உலக கும்பலை சேர்ந்த கணேமுல்லை சஞ்சீவ என்பவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரியை எதிர்வரும் மார்ச் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 26 வயதுடைய பொலிஸ் அதிகாரி ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் அதிகாரி கணேமுல்லை சஞ்சீவ சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபருக்கு உதவி செய்ததாக கூறப்படும் பெண்ணுடன் தொலைபேசியில் தொடர்புகளை பேணி வந்த குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர், கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதையடுத்து அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், கொழும்பு - புதுக்கடை நீதிமன்றத்துக்குள் சட்டத்தரணி வேடத்தில் சென்று கணேமுல்லை சஞ்சீவமீது துப்பாக்கிச் சூட்டை நடத்திய பிரதான சந்தேக நபரும், சந்தேக நபர் தப்பிச் செல்வதற்கு உதவி செய்த வான் சாரதியும் நீதிமன்ற உத்தரவின் கீழ் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# வடமராட்சி தெற்கு மேற்கு சபையால் வீதிகளுக்கு பெயர் பலகைகள்!

வடமராட்சி, பெப். 22

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள வீதிகளுக்கு பெயர் பலகைகள் நாட்டப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசத்துக்குள்ள 694 வீதிகளில் 39 வீதிகளின் ஆரம்பம் முதல் முடிவுறும் வீதிகளில் பெயர்பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரதேசத்திலுள்ள பிரதான வீதிகளை இணைக்கும் வீதிகளுக்கே முதல்கட்டமாக வீதி பெயர்ப்பலகைகள் நாட்டப்பட்டுள்ளன. வீதிகளின் முக்கியத்துவத்துக்கமைய கட்டம் கட்டமாக வீதிகளின் பெயர்ப்பலகைகள் நாட்டப்பட்டது. முதல் கட்ட நடவடிக்கை என பிரதேச சபை செயலாளரல் ஹம்சநாதன் தெரிவித்தார்

(ஐ-02)

## சூட்டுக் காயங்களுடன் இளைஞரின் சடலம் மீட்பு

கொழும்பு, பெப். 23

துப்பாக்கிச்சூட்டு காயங்களுடன் இளைஞர் ஒருவர் கடற்கரையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கம்பஹா - ஜா- எல - உஸ்வெட்டகெய்யாவ கடற்கரையில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞரின் வயது 30 இருக்கலாம் என்று மதிக்கப்பட்டுள்ளது. குறித்த சடலம் அடையாளம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்பதுடன், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# ஜனாதிபதியின் செயலருடன் வியட்நாம் தூதுவர் சந்திப்பு



கொழும்பு, பெப். 22

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் திருமதி டிரின் தீ டேம் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், வியட்நாமின் உதவியுடன் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.


விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறைகளிலும் முதலீட்டு ஊக்குவிப்பிலும் இலங்கையுடன் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வியட்நாம் தயாராக இருப்பதாகவும் தூதுவர் தெரிவித்தார்.

அத்தோடு நாடென்ற வகையில் வியட்நாம் அடைந்துள்ள வெற்றிகளை இலங்கையில் திறம்பட பயன்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

வியட்நாம் தூதரகத்தின் பிரதி செயற்பாட்டு பிரதானி லீ வேன் ஹோங் மற்றும் தூதுவரின் செயலாளர் ரம்யா நிலங்கனி ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி -22 சனிக்கிழமை
குரோதி வருடம் - மாசி 10
நல்ல நேரம் : 7.31-9.00
ராகு காலம் : 9.00 -10.30
திதி : தசமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர்கள். குடும்பத்திலுள்ளவர்களிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. வியா பாரத்தில் இழப்புகள் ஏற்படும்.

**இடபம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

**மிதுனம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். தொட்டது துலங்கும் நாள்.

**கடகம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலைகளையும் ஒப்படைக்க கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில உண்மையானவர்களை கண்டறிவீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள்.

**சிம்மம்**
நட்பு வட்டம் விரியும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். புது வேலை கிடைக்கும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். தாயாருக்கு கை, கால் வலி வந்து போகும்.

**கன்னி**
தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீரகள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஆடை, ஆபரணம் சேரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் புது முயற்சிகள் வேண்டாம். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**தனுசு**
ஒரு விஷயத்தை நினைத்து அதிக அளவில் குழப்பம் அடைவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். போராடி வெல்லும் நாள்.

**மகரம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நம்பிக்கைக்கு உரியவர்களை கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**கும்பம்**
பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.


**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். குடும்பத்தில் அமைதி நிலவும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் லாபம் உயரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

# வடக்கிலுள்ள திறமை மிக்க வீரர்களை தேசிய அணியில் உள்வாங்க வேண்டும்

## ஜெகதீஸ்வரன் எம்.பி. வலியுறுத்தல்

கொழும்பு, பெப்.22

வடமாகாணத்தில் உள்ள திறமை மிக்க வீரர்களை தேசிய மட்ட அணிகளில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.



விளையாட்டுத் துறை அமைச்சுக்கான உப குழுக் கூட்டம் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,"இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சுக்கான உப குழுக் கூட்டம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இதில், உறுப்பினராக நான் இருப்பதால் எமது பிரதேசத்தின் விளையாட்டுத் துறை தொடர்பில் பல விடயங்களை முன்வைக்க முடிந்தது. வவுனியா, ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்குக்குத் தேவையான ஆளணி, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ஏனைய தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அதனைப் பெற்றுக் கொடுக்க வேணடும் எனவும் கோரிக்கை முன்வைத்தேன்.

அத்துடன், பிரதேசத்தில் காணப்படும் விளையாட்டுக் கழகங்கள் தொடர்பாக கூடிய அவதானத்தை செலுத்த வேண்டும் எனவும் வடமாகாணத்தில் உள்ள திறமை மிக்க வீரர்களை தேசிய மட்ட அணிகளில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினேன்.

போதைப் பொருள் பாவனை, சமூக வலைத்தளங்களில் மூழ்கியிருக்கும் இளைஞர், யுவதிகளின் அவதானத்தை நல்ல வழியில் கொண்டுவர விளையாட்டுத் துறை காணப்படுகின்றது. அதனை ஊக்குவிக்க வேண்டும். எதிர்வரும் காலங்களில் இது தொடர்பாக கவனம் செலுத்துவதாகவும், எழுத்து மூல முன்மொழிவுகளை வழங்குமாறும் விளையாட்டுத் துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அதற்கு அமைவாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் விளையாட்டுத்துறை சார்பாக ஏதாவது பிரச்னைகள் இருப் பின் எனக்கு எழுத்து மூலமாக தந்தால் நடவடிக்கை எடுக்க முடியும்"- என்றார்.

(எ-10)

# 5 கிலோ கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, பெப்.22

கிளிநொச்சி - இயக்கச்சி பகுதியில் 5 கிலோ 660 கிராம் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் கைது செய் யப்பட்டுள் ளார்.

கேரளக் கஞ்சாவு டன் கைது செய்யப்பட் டவர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மரு தங்கேணி பொலிஸா ரிடம் ஒப் படைக்கப் பட்டுள்ளார்.

(எ-05)



# உயிருக்கு உத்தரவாதம் இல்லையா? வவுனியா நீதிமன்றம் முன் பதாகை

வவுனியா, பெப்.22

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக் கண்டனம் தெரிவித்து வவுனியா மேல் நீதிமன்றம் முன்பாகஅகில இலங்கை நீதிமன்ற ஊழியர் சங்கத்தால் நேற்று முன்தினம் முதல் பதாகை ஒன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.




அதில், திறந்த நீதிமன்றத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு பிரயோகத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். நீதிபதிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லையா? என அப் பதாகை மூலம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

(எ-10)

# வீதி புனரமைப்பு பற்றி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.22

வீதிப் புனரமைப்பு தொடர்பான விசேட கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், "அரசாங்கமானது வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக வடமாகாணத்தில் உள்ள வீதிகளைப் புனரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள வீதிகளையும் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மாவட்டத்தில் புனரமைக்க வேண்டிய வீதிகளின் விவரங்களை துல்லியமான முறையில் தயாரித்து உரிய அமைச்சுக்கு வழங்க வேண்டும்.

இதற்காக பிரதேச செயலக ரீதியாக புனரமைக்க வேண்டிய வீதிகளின் விவரங் களை வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து சரியான முறையில் தயாரித்து மாவட்டத்தின் மொத்த தேவைப்பாடுகளை தயாரிக்க வேண்டும்"- என்றார்.

ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக புனரமைப்பு செய்ய வேண்டிய வீதிகள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாதிபத்திய பொருளாதாரத்துக்கு இந்த பட்ஜெட் மூலம் முற்றுப்புள்ளி!

## அமைச்சர் லால்காந்த சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 22

**பொருளாதார ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட வரவு-செலவுத் திட்டத்தை நாட்டுக்கு முதல் தடவையாக மூலதனமாக்கியுள்ள பெருமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவையே சாரும். நண்பர்களுக்கு மட்டும் பொருளாதாரத்தின் பிரதிபலனை பெற்றுக் கொடுத்த ஏகாதிபத்திய வாதத்தை தற்போதைய அரசாங்கம் வீழ்ச்சியடைய செய்துள்ளது என விவசாய, காணி மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கே.டி லால்காந்த தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் எதிர்க்கட்சி நீலிக் கண்ணீர் வடிக்கிறது.

அதற்கு எதிராக உண்மைக்கு புறம்பான கருத் துக்களை வெளியிட்டு வருகி றது. தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்கள் கவலையடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்து வருகின்றனர். மறுபுறம் கால் மார்க்ஸ் பற்றியும் தெரிவிக்கின்றனர். அந்த வகையில் சமூக சந்தை பொருளாதார நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டவர்கள் மகிழ்ச்சியாக உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம் அரசாங்கம் தற்போது சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத் திட்டம், ரணில் விக்கிரமசிங்கவின் வரவு-செலவுத் திட்டம் என்றும் எதிர்க்கட்சி தெரிவிக்கிறது.

அவர்க ளைப் போன்று ஆட்சியை கவிழ்த்து விட்டுப் போகும் வகையில் அல்லாமல், நாம் அரசாங்கத்தை நிலையாக முன்னெடுத்துச் செல்லும் வகையிலே வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கிறோம்.

அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை மிக அதிகம் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அது உண்மைதான் ஒவ்வொரு அமைச்சரும் அவருக்கு தேவையானளவு அரசாங்க ஊழியர்களை அந்த அரசாங்கத்தின் காலத்தில் நியமித்தனர். அதனால் தான் அரசாங்க ஊழியர்களின் தொகை அதிகரித்தது.

எவ்வாறெனினும் அரசாங்கம் அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்காக 30,000 பேரை இணைத்துக் கொள்வதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

இதுவரை நாட்டில் ஏகாதிபத்திய பொருளாதாரமே காணப்பட்டது. தமது நெருங்கிய நண்பர்களுக்கே வர்த்தகங்கள் வழங்கப்பட்டன.

தேங்காய் எண்ணெய்யை இறக் குமதி செய்வதற்கும் அரசாங்கத்திற்கு வேண்டியவர்களுக்கே வாய்ப்பு வழங்கப்பட்டது. நாம் அத்த கைய நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளோம்-என்றார். (அ)

# வானிலையில் மாற்றம்!

கொழும்பு, பெப். 22

காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் சில இடங்களில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிரதானமாக வறண்ட வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், நாளை முதல் நாடளாவிய ரீதியில் நிலவும் வறண்ட காலநிலையில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது

மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் குருநாகல் மாவட்டத்தில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படலாம்.இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார் கள்.

காற்று வடகிழக்கு திசையில் வீசும் மற்றும் வேகம் மணிக்கு (20-30) கி.மீ. வரை காற்றின் வேகம் அதிகரிக்கலாம்.

சிலாபத்திலிருந்து புத்தளம் ஊடாக மன்னார் வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கி.மீ. சிலாபத்திலிருந்து புத்தளம் ஊடாக மன்னார் வரையான கரையோரங்களுக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஆசிரியர் வருடாந்த இடமாற்றத்தை இந்தமாத இறுதிக்குள் மேற்கொள்க!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, பெப். 22

ஆசிரியர்களுக்கான வருடாந்தர இடமாற்றத்தை இந்த மாத இறுதிக்குள் மேற்கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.தேசிய பாடசாலை ஆசிரி யர்கள் உள்ளிட்ட 12,000 ஆசிரியர்கள் இடமாற்றத்தை எதிர் பார்த்துள்ளதாக அவர் குறிப் பிட்டார்.

அதில் பலர் பத்து வருடங்களுக்கு மேலாக ஒரே பாடசாலையில் சேவையாற்றியவர்கள் எனவும் சிலர் நீண்ட காலமாக தூரப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கற்பிப்பவர்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# அதானியுடன் மீண்டும் பேச்சு அரசு இன்னும் தீர்மானமில்லை

கொழும்பு, பெப். 22

அதானியுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது தொடர்பில் அரசாங்கம் எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. பொருளாதார நிலைமைக்கமைய எவ்வாறு குறைந்த விலையில் மக்களுக்கு மின்சாரத்தை வழங்குவது என்பது தொடர்பிலேயே அவதானம் செலுத்தியிருப்பதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-நாம் தேசிய வர்த்தகர்களிடமிருந்து அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து தேசிய தேவைப்பாட்டுக்கமைய நியாயமான விலையில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான முன்மொழிவையே நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதன் ஊடாக மக்க ளுக்கு நன்மை ஏற்படக்கூடிய வகையில் மின்னுற்பத்தியை முன்னெடுக்க முடியும்.

மின்னுற்பத்திச் செலவுகளைக் குறைப்பது தொடர்பிலேயே நாம் பேச்சுக்களை முன்னெடுத்திருக்கின்றோம். அமைச்சரவையில் அதானி செயற்றிட்டத்தை இரத்து செய்வது தொடர்பில் எவ்வித பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படவில்லை. மின் அலகொன்றுக்கான விலையை குறைப்பதற்கான பேச்சுவார்த்தைகளையே நாம் முன்னெடுத்திருந்தோம்.

இந்தியாவுக்கு வழங்கும் விலையிலேனும் பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்தோம். எவ்வாறிருப்பினும் அதானி நிறுவனம் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

இதுவே அவர்கள் தமது செயற்றிட் டத்தை நிறுத்துவதற்கு பிரதான காரணியாக அமைந்தது. வேறொரு நிறுவனம் இதனை விட குறைந்த விலையில் மின் உற்பத்தியை மேற்கொள்ள முன்வந்துள்ளது. இதனையே நாமும் எதிர்பார்க்கின்றோம்-என்றார். (அ)

# மாலைதீவுப் பிரஜைகளுக்கான வீஸா நடைமுறை ஹரிணியிடம் எடுத்துக்கூறிய அந்நாட்டு அமைச்சர்



கொழும்பு, பெப். 22

இலங்கைக்கு வரும் மாலைதீவு பிரஜைகளுக்கான விஸா நடைமுறைகளை முறைப்படுத்துவது குறித்து மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் கலாநிதி அப்துல்லா கலீல், பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் கலந்துரையாடினார்.

மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் கலாநிதி அப்துல்லா கலீல், பிரதமர் ஹரிணி அமரசூரியவை நேற்று முன் தினம் வியாழக்கிழமை ஆம் திகதி பாராளுமன்ற வளாகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்ட கால இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதுடன், இரு நாடுகளினதும் இராஜதந்திர நடவடிக்கைகளில் தொடர்ந்து செல்வாக்கு செலுத்தும் நீண்ட கால உறவுகள் மற்றும் பரஸ்பர நலன்கள் குறித்து இச்சந்திப்பின் போது கவனம்செலுத்தப்பட்டது.

நாட்டின் பொருளாதாரத்தின் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் குறித்து பாராட்டிய மாலைதீவு அமைச்சர் இரு நாடுகளினதும் பொருளாதாரத்தில் சுற்றுலாத் துறை யின் முக்கிய பங்கு குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் இரு நாடுகளுக்கு இடையே சுற்றுலாவை மேம்படுத்துவதில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

இரு நாடுகளுக்குமிடையிலான பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி, இலங்கைக்கு வரும் மாலைதீவு பிரஜைகளுக்கான விசா நடைமுறைகளை முறைப்படுத்துவது குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

மக்களுக்கு இடையேயான உறவுகளை வலுப்படுத்த, சுமூகமான பயண நடைமுறைகளை எளிதாக்குவதன் முக்கியத்துவம் தொடர்பில் இலங்கை பிரதமரும் மாலைதீவு அமைச்சரும் இணக்கம் தெரிவித்தனர். (அ)

# ரஜரட்டை பல்கலை வேந்தர் பதவியை இராஜினாமா செய்த சுமனசிறி தேரர்!

கொழும்பு, பெப். 22

ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் வேந்தரான கல்லேல்லே சுமனசிறி தேரர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இவர் ரஜரட்டை பல்கலைக் கழகத்தின் வேந்தராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டு, கடந்த 14 ஆம் திகதி நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில், வேந்தராக நியமனம் பெற்று ஒரு வாரத்தில் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

கல்லேல்லே சுமனசிறி தேரர், ஹரங்கஹவ மொலகொட ரஜமகா விகாரையின் விகாராதிபதியாவார். அகில இலங்கை சாசனபாதுகாப்புச் சபையின் கண்டி மாவட்டச் செயலாளராகவும் பணியாற்றும் அவர், ஹோமாகம பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறிய அளவு நெல்லே இப்போது களஞ்சியங்களுக்கு கிடைக்கிறது

கொழும்பு, பெப். 22

விவசாயிகள் தற்போது அரசாங்கத்துக்கு சிறிய அளவில் நெல்லை வழங்கி வருவதாகவும் அறுவடை செய்யப்படும் பிரதேசங்களில் உள்ள நெல் களஞ்சியசாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்தார்.

சந்தையில் இன்னுமும் குறைந்த அளவிலேயே நெல் காணப்படுவதாகவும், எதிர்வரும் நாட்களில் அதிகளவு நெல் கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுவதாகவும், அதற்குள் சபைக்கு நெல் கையிருப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.நெல் கொள்முதல் செய்வதற்காக அரசாங்கம் இதுவரை ஐந்து பில்லியன் ரூபாயை வழங்கியுள்ளது என்றும்அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மன்னார் திருச்சபையின் மாட்சிமிகு நல்லாயன்

மன்னார் மாவட்டத்தின் புதிய ஆயராக இன்று (22 பெப்ரவரி 2025) மடு அன்னையின் திருத்தலத்தில் திருநிலைப் படுத்தப்படும் பேரருட்திரு. அன்ரனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களுக்கு எனது இதயம் நிறைந்த வாழ்த்துக் களை பெருமகிழ்வுடன் கூறி நிற்கிறேன். ஆயரின் பெரும் பணி சிறக்க இறைவனை வேண்டி நிற்கும் மன்னார் மக்களுக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது நம்பிக்கையின் இல்ல சமூக அலுவலர்கள் சார்பாக மனம் நிறைந்த பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

அடம்பன் நகரில் பிறந்த அருட்குரு ஞானப்பிரகாசம் ஆண்டகை முன்னாள் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் செயலாளராக பணியாற்றிய நாட்களில் ஆயருக்குரிய பொறுப்புக்களை நன்கு கற்று செழுமையான மறைப்பணி மற்றும் மக்கள் பணி அனுபவத்தைப் பெற்றுக்கொண்டார். பின்னர் மடுத்திருப்பதியின் பிரதம பரிபாலன குருவாகவும் மகத்துவம் மிக்க பணியாற்றியவர். ஆண்டுதோறும் மடுத்திருத்தலத்திற்கு முதியவர்களை திருப்பயாத்திரைக்கு அழைத்துச் செல்பவர் என்ற வகையில் நான் இதை நன்கு அறிவேன்.

இவர் மன்னார் மக்கள் மத்தியில் பாசத்தின் இருப்பிடமாகவும், அன்பின் சிகரமாகவும் வாழ்ந்து காட்டியதை மக்கள் நன்றி யுணர்வுடன் நினைவில் கொள்வர். மன்னார் கத்தோலிக்க சமூகத்தினதும் குருமாரினதும் பேரன்பிற்குரியவரான வண ஞானப்பிரகாசம் ஆண்டகை அதீத போர்க்காலத்தில் மக்களோடு மக்களாக நின்று அவர்களின் துயர் துடைக்க அரும்பணி யாற்றியவர். இவர் மடுமாதா திருப்பதிக்கு வரும் சகல இன மக்களினதும் பெருமதிப்புக்குரியவராகவும் விளங்குகின்றார். இவர் புதிய ஆயராக திருநிலைப்படுத்தப்படுவதை முன்னிட்டு மன்னார் கத்தோலிக்க சமூகம் மாத்திரமல்ல இலங்கையில் பல பகுதிகளிலும் வாழும் எல்லா சமூகத்தவர்களும் ஒரு மனத்து டன் பெருமகிழ்ச்சி கொண்டு ஆயரை வாழ்த்தி நிற்கின்றனர். வண. ஞானப்பிரகாசம் ஆண்டகை புதிய ஆயராக திருநிலைப் படுத்தப்படும் இன்றைய அருள்மிகு வைபவம் உலகத் தமிழ் மக்கள் குறிப்பாக கிறிஸ்தவர்கள் பரந்து வாழும் மாநகர்கள் எங்கும் பெருமகிழ்வுடன் நோக்கப்படுகிறது.

மடுத்திருப்பதியின் பிரதம பரிபாலன குருவாக விளங்கிய போது ஆண்டகை அந்த திருப்பதிக்கு அருள் வேண்டிவரும் தமிழ், சிங்கள, முஸ்லிம் இன, இந்து பௌத்த இஸ்லாமிய மத மக்கள னைவரையும் எவ்வித பேதமும் பாராட்டாமல் மிகுந்த அன்புட



னும், அக்கறையடனும் இன்முகத்துடன் வரவேற்று ஆசீர்வதித்த ஒரு அற்புதத் துறவி ஆவார். இவர் ஆயராக திருநிலைப் படுத்தப்படுவது குறித்து மன்னார், யாழ்ப்பாணம் கொழும்பு. கண்டி, காலி, குருநாகல் என்று இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள ஆயர்கள், குருமார், கன்னியர், துறவிகள் ஆரவாரத்து டனும், பெருமகிழ்வுடன் வரவேற்கிறார்கள்.

உலகத்தமிழர்கள் அதிஉயரத்தில் வைத்து போற்றிவரும் மறைந்த மாமனிதர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் வலது கரமாக மிகவும் ஆபத்து மிகுந்த போர்க்காலத்தில் பணியாற்றிய அனுபவத்தை கொண்டவர். ஆயர்பணி மலிவான புகழுக்கும், பகட்டான வாழ்வுக்குமான படிக்கட்டு அல்ல என்பதை உணர்த்தி உலகெங்கும் வாழும் தமிழ்ச் சமூகத்தால் மதித்துப் போற்றப்படு பவரும், இலங்கையின் ஆயர்களுக்கு ஒரு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் வாழ்ந்து மறைந்தவர் ஆண்டகை இராயப்பு ஜோசப். தமிழ் மக்களின் நீதி மற்றும் விடுதலைக்கான போராட் டத்தில் அரசியல் நியாயத்தினை உலகிற்கு எடுத்தியம்புவதற்காக தன்னை அர்ப்பணித்ததன் மூலமாக மன்னார் மறை மாவட் டத்திற்கு ஒரு தனித்துவமான பெயரை ஏற்படுத்திக் கொடுத்தவரும் இராயப்பு ஜோசப் ஆண்டகையே. அவரின் வழியில் ஞானப் பிரகாசம் ஆண்டகையும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமை களுக்காக குரல் கொடுக்க வேண்டும். அத்துடன் மற்றைய இன, மத மக்களின் அன்புக்கும், மதிப்பிற்கும், ஏற்புடைமைக்கும் பாத் திரமாகக் கூடியதாக அவரின் பணி அமையும் என்பது நிச்சயம்.

பேராயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் நிறுவப்பட்ட கொழும்புத்துறையிலுள்ள புனித சவேரியார் குருத்து வக் கல்லூரியில் முழுநேர குருத்துவ மாணவராக கல்வி கற்று, குருவாகியபின் ஆயர் நிலைக்கு உயர்த்தப்பெற்ற முதலாவது அருட்பணியாளர் என்ற வரலாற்று பெருமைக்குரியவர் எமது புதிய ஆயர். அருட்கலாநிதிகள் பிலிப் பொன்னையா, சி.ஜோ. இம்மானுவல், அ.ஜோ.சந்திரகாந்தன், எட்வின் சவுந்தர நாயகம், டோமினிக் ஜோசப், மைக்கல் சவுந்தரநாயகம், நீ.மரியசேவியர் போன்ற மேன்மைமிகு குருக்களின் மாணவனாக ஆற்றுப் படுத்தப்பட்டவர்.

தனது அருட்பணி வாழ்வில் வழிகாட்டியாய் இருந்த மறைந்த பேராயர் இராயப்பு ஜோசப் அவர்களைப் போன்று பதவி மோகம், அதிகாரப்பற்று அற்ற பெருந்துறவியாக ஞானப்பிரகாசம் ஆண் டகையும் இறைமக்கள் பணியே இறைஅழைப்பின் மகுடம் என் பதை தன் சேவைகள் மூலம் நிலைநாட்டி அன்னையின் பரிந்து ரையில் ஆண்டவன் பணி ஆற்ற மீண்டும் அவருக்கு எமது இத யம் கனிந்த வாழ்த்துக்களை கூறுவதுடன் அருளாசிகளையும் வேண்டிநிற்கிறோம்.

- அமுது நேரு

## மன்னார் மக்களுக்கு இறைவனின் அருட்கொடை

மிகுந்த மகிழ்ச்சியுடன் மன்னாரின் புதிய ஆயர் அந்தோனிப் பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். மன்னார் மறை மாவட்டத்தின் நான்காவது ஆயராக நியமிக்கப்பட்ட இவர் இந்தப் புனிதப் பணிக்கு இறைவனால் அழைக்கப்பட்ட மன்னார் மண் ணின் முதல் மகன்.

கொழும்புத்துறையில் உள்ள புனித பிரான்சிஸ் சேவியர் உயர் குருத்துவக் கல்லூரியிலும் எனது மாணவராக இருந்த உங்களை நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக, நற்பண்புள்ள, ஆழ்ந்த பக்தியுள்ள மாணவராக நான் அறிவேன். உங்கள் பணிப் பயணம் முழுவதும் உங்கள் நம்பிக்கை, ஞானம் மற்றும் இறை அர்ப்பணிப்பு ஆகியவை தெளிவாகத் தெரிகிறது.

இந்தப் புதிய அழைப்பு, கடவுளுடைய மக்களுக்குச் சேவை செய்வதில் உங்களுக்குள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்பபின் நல்ல சான்றாகும். இந்தப் புனிதப் பொறுப்பை நீங்கள் ஏற்கும் போது, பரிசுத்த ஆவியானவர் உங்களை வழிநடத்தி, உங்களை ஞானத்தாலும் இரக்கத்தாலும் நிரப்புவாராக.

**Prof. Dr. Joseph A. Chandrakanthan,**
*PhD (Ottawa) ThD (St. Paul)*
*University of Toronto.*

## இலண்டன் தமிழ் கத்தோலிக்கரின் இனிய வாழ்த்துக்கள்

மன்னார் திருச்சபையின் மகத்தான மகனொருவர் இன்று அவர்களை வழிநடத்தும் நல்லாயனாக திருப்பட்டம் பெறு வதை லண்டன் தமிழ் கத்தோலிக்க மக்கள் சார்பாக வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இச்சங்கத்தின் முன்னாள் தலைவர் என்ற வகையில் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையுடன் பல தடவைகள் தொடர்பு கொண்டிருந்தேன். அவ்வேளையில் செயலாராக விளங்கிய புதிய ஆயர் லண்டன் தமிழ் கத்தோலிக்கர்களுக்கு பலவழிகளிலும், வகைகளிலும் உதவியுள்ளமையை இங்கு அன்போடும், நன்றியோடும் நினைவு கூருகின்றேன். ஆயரின் பணி சிறக்க இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**திரு. இராசா சுவாம்பிள்ளை**
பொறியியலாளர், பட்டயக்கணக்காளர்,
முன்னாள் தலைவர், இலண்டன் தமிழ் கத்தோலிக்க சங்கம்.

## புதிய ஆயரை வாழ்த்தி மகிழ்கின்றோம்

மன்னார் மறைமாவட்டத்தின் நான்காவது ஆயராக அபிஷே கம் பெறும் அதிவந்தனைக்குரிய அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்களை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

ஆயர் அபிஷேகம் திருவழிபாட்டுக் கொண்டாட்டத்தையும் தாண்டி புத்தம்புதிய ஆயருக்கும், மறைமாவட்டத்திற்கும், நம் அனைவருக்கும் இறைவனின் ஆசீர்வாதங்களை உறுதிப்படுத்து கின்றது.

மருதமடுத் தாயார் குடிகொண்டெழுந்தருளியிருக்கும் மடுத் திருப்பதியும் மன்னார் மறைமாவட்டமும் இலங்கை அமல மரித்தியாகிகளின் நெஞ்சத்திற்கும் பணிப்பரப்பிற்கும் நெருக்க மானவை.

ஆயர் திருப்பொழிவு தினமாம் 2025ம் ஆண்டின் மாசித் திங்கள் 22ஆம் நாள் இறையருளின் விசேட தருணம். இவ் வருளின் தருணத்தில், புதிய ஆயரை வாழ்த்துவதோடு, அவர்தம் ஆயத்துவப்பணி சிறக்கவும், அவர் வழியாய் இறையருள் எம்மை நிறைக்கவும் ஆசித்துச் செபிக்கின்றோம்.

**அருட்டிரு. போல் ஜெயந்தன் பச்சேக்,**
அ.ம.தி. மாகாண முதல்வர்,
யாழ். மாகாண அமல மரித் தியாகிகள்.

## மன்னார் மண்ணின் மகத்தான மாணிக்கம்

இன்று மன்னார் மண்ணின் முதல் மகனாக ஆயர் நிலைக்கு திருநிலைப்படுத்தப்படும் பேரருட்திரு. அன்ரனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களுக்கு முன்னாள் மன்னார் ஆயர் அமரர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் குடும்ப உறவின ராகிய நாம் செபத்துடன் கூடிய எமது வாழ்த்துக்களை பணி வோடு தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். பல ஆண்டுகளாக செயல்திறன் மிக்க செயலாரக பெரும் பணியாற் றிய புதிய ஆயர் மன்னார் மக்களுக்கு ஒரு ஞான ஒளியாகவும் பணியாற்றல் மிக்க நல்லாயனாகவும் மன்னார் திருச்சபையை வழிநடத்துவார் என்பதில் நாம் பெருமைப்படுகின்றோம். புதிய ஆயரை நெடுந்தீவு, யாழ்ப்பாணம். வவுனியா. செட்டிகுளம் மற் றும் பிற நாடுகளில் வாழும் முன்னாள் ஆயரின் குடும்ப உறவின ராகிய நாம் இதயம் நிறைந்த நன்றியுடன் நினைந்து பணிவாழ் வில் பரமனின் பிரசன்னம் ஒன்றித்திருக்க வாழ்த்தி இறைவனை பிரார்த்திக்கின்றோம் .

நெடுந்தீவு – யாழ்ப்பாணம், – வவுனியா, செட்டிகுளம்
மற்றும் பிற நாடுகளில் வாழும்
**முன்னாள் ஆயரின் குடும்ப உறவினர்**

## மக்களுக்கும் தாய் நாட்டுக்கும் பணியாற்ற வாழ்த்துகின்றோம்

எமது பரிசுத்த தந்தை பிரான்சிஸ் அவர்களாளல் மன்னார் மறைமாவட்டத்தின் நான்காவது ஆயராக இன்று அருட் பொழிவு பெறும் பேரருள்திரு. அந்தோனிபிள்ளை ஞானப்பிர காசம் ஆண்டகை அவர்களை நானும், எமது பங்கு மக்களும் அன்புடன் வாழ்த்திப் பாராட்டுகிறோம். மன்னார் மக்களுக்கும் எமது தாய் நாட்டுக்கும் அவர் மகத்தான பணியாற்ற இறைய ருளை வேண்டி நிற்கின்றோம்.

**அருட்பணி சார்லஸ் கொலின்ஸ்**
பங்குத் தந்தை,
தூய ஆரோக்கிய அன்னை பங்கு, ஸ்கார்பரோ.

## கலங்கரை விளக்கமாகும் புதிய மன்னார் ஆயர்

மன்னார் மறைமாவட்ட ஆயராக நீங்கள் திருநிலப்படுத்தபடும் இந்த நன்னாளில் எமது மனமார்ந்த வாழ்த்துக்களை மிகுந்த மகிழ்ச்சியுடன், தெரிவிக்கும் இவ்வேளையில் சமகாலத்தவர்க ளாகிய நாங்கள் மேற்கொண்ட பணிவாழ்வுப் பயணத்தைப் பற்றி நான் சிந்திக்கிறேன், மேலும் இந்த புனிதமான அழைப்புக்காக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில் நான் மகிழ்ச்சிய டைகிறேன். கடவுள் தனது மந்தையை, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்டவர்களை வழிநடத்த உங்களுக்கு ஞானத்தையும், கிருபையையும், வலிமையையும் வழங்க வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். உங்கள் தலைமைத்துவம் நமது மறை மாவட்டத்தின் ஆன்மீக, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட் டிற்கான நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக இருக்கட்டும். நீங்கள் என் ஜெபங்களில் இருக்கிறீர்கள், கடவுள் அவருடைய அமைதி மற்றும் அன்பின் கருவியாக உங்களை வழிநடத்துவார் என்று நம்பி எனது முழு ஆதரவையும் அளிக்கிறேன்.

ஆழ்ந்த பிரார்த்தனையுடன்,
**அருள்தந்தை. மு. ஜெயபாலன்**
இயக்குநர், வளமான வாழ்க்கைக்கான ஆணையம்,
ஜோசப் வாஸ் நகர்.

## அதி. வண. ஞானப்பிரகாசம் ஆண்டகை நீடு வாழ்க

வரலாற்றுப் புகழ்மிக்க மன்னார் மறைமாவட்டத்தில் இன்று அருள் பொழிவு பெறும் ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப் பிரகாசம் அவர்களுக்கு எனது குடும்பம் சார்பாக எனது அன்பான வாழ்த்துக்களை தெரிவிகின்றேன். அவரது திருப்பணி சிறப்புற இறைவனை வேண்டுகிறேன்.

**பெனடிற் அன்ரனி குடும்பத்தினர்**
நீர்கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் பொலிஸார், முப்படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்கவேண்டும்

## அமைச்சர் சந்திரசேகர் வலியுறுத்தல்

கொழும்பு, பெப். 22

**யாழ்ப்பாணம் வலி- வடக்கில் பொலிஸார் மற்றும் முப்படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். அத்துடன் விடுவிக்கப்படும் காணிகளில் மக்கள் குடியிருப்புக்களை நிர்மாணித்துக் கொள்ள அனுமதிக்கவேண்டுமென பாதுகாப்பு அமைச்சுசார் குழுக் கூட்டத்தில் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வலியுறுத்தியுள்ளார்.**

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் பாதுகாப்பு அமைச்சுசார் குழு கூட்டம் நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சுசார் குழு கூட்டத்தில் கலந்துக் கொண்ட கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், " யாழ் - வலி. வடக்கில் 2009 ஆண்டு பொலிஸார் மற்றும் முப்படையினர் வசம் 23 ஆயிரம் ஏக்கர் காணி காணப்பட்டது. இக்காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வந்தன.

இதன் பிரகாரம் 21 ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்பட்ட நிலையில் தற்போது 2640 ஏக்கர் பொலிஸார் மற்றும் முப்படையினர் வசமுள்ளது. இக்காணிகள் மக்கள் பயன்படுத்தும் வகையில் விடுவிக்கப்பட வேண்டுமென கோரினார்.

அத்துடன் வலி.வடக்கில் அண்மைக் காலத்தில் விடுக்கப்பட்ட காணிகளில் விவசாயம் மேற்கொள்ளப்ப டவில்லை. இதற்கு குடியிருப்பு இல்லையென்ற காரணம் சொல்லப்படுகின்றது.எனவே விடுவிக்கப்பட்ட காணிகளில் வீடு கட்டிக் கொள்ள அனுமதிக்க முன்வர வேண்டும்

அத்துடன் பலாலி - வசாவிளான் சந்தி வரையான வீதி மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்படவேண்டுமெனவும் அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

மேலும் முல்லைத்தீவு கேப்பாபிலவு காணி விடுவிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் கடற்தொழில் அமைச்சர் முன்வைத்த நிலையில் கூட்டத்தில் கலந்துக் கொண்ட இராணுவ உயர் அதிகாரிகள் விடுவிக்கப்பட்ட பகுதிகளை அரசாங்கத்திடம் ஒப்படைக்கவுள்ளதாக குறிப்பிட்டனர். (அ)

# ஒரு நாள் சேவைக் கடவுச்சீட்டுக்களை வழங்க மாத்திரம் 24 மணி நேர சேவை

கொழும்பு, பெப். 22

ஒரு நாள் சேவையின் கீழ் விண்ணப்பிக்கும் கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கு மாத்திரம் 24 மணி நேர சேவை செயல்படுத்தப்படும் என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்காக ஒவ்வொரு திங்கட்கிழமையும் காலை 6 மணி முதல் வெள்ளிக்கிழமை மதியம் 12 மணி வரை மாத்திரம் பதிவு செய்யலாம் என திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பதில் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகம் பி.எம்.டி. நிலுஷா பாலசூரிய இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கை

## சபாநாயகர் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு

கொழும்பு, பெப். 22

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளதாக சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவ்வப்போது பெறப்பட்ட கோரிக்கைகளை பரிசீலித்த பின்னர், தொடர்புடைய கோரிக்கையை பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பித்ததாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

(அ)

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பலகோணங்களில் விசாரணை

கொழும்பு, பெப். 22

நீதிமன்றத்துக்குள் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின் பின்புலம் தொடர்பிலும், அதனுடன் தொடர்புபட்ட தரப்புகள் சம்பந்தமாகவும் பல கோணங்களில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மேற்படி சம்பவத்தை சாதாரணதொரு சம்பவமாக அரசாங்கம் கருதவில்லை எனவும் அவர் கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதன்போது பாதாளக் குழுத் தலைவர் கணேமுல்ல சஞ்ஜீவ நீதிமன்றத்துக்குள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் பலகோணங்களில் அமைச்சரிடம் கேள்விகளை எழுப்பினர்.

கணேமுல்ல சஞ்ஜீவ ஒரு நீதிமன்ற அறையில் இருந்து மற்றுமொரு அறைக்கு செல்வது தொடர்பில் எவ்வாறு தகவல் தெரிந்துள்ளது, சட்டத்தரணிகள் எவரேனும் இதற்கு உதவியுள்ளனரா, இதனால் தேசிய பாதுகாப்புக்கு பிரச்னையா? துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் பல கொலைகளுடன் தொடர்புபட்டவர் எனில் இதற்கு முன்னர் ஏன் கைது செய்யப்படவில்லை என்றெல்லாம் கேள்விகள் எழுப்பட்டன.

இவற்றுக்கு பதிலளித்த அமைச்சர்,இது தொடர்பில் பலகோணங்களில் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. விசாரணைகளின் அடிப்படையிலேயே தகவல்கள் வெளிவரும்.


இச்சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்தில் தகவல்கள் வெளியிடுவார். அப்போதுகூட முழுமையான தகவல்களை வெளியிடமுடியுமா என தெரியவில்லை. ஏனெனில் விரிவாக விசாரணை நடத்தப்பட வேண்டும்.- என்றார். (அ)

# மாலைதீவுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு அழைப்பு!

கொழும்பு, பெப். 22

மாலைதீவுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் மாலைதீவு குடியரசின் வெளியுறவு அமைச்சர் அப்துல்லா கலீலுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.



கடந்த தேர்தல்களில் ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்துக்குக் கிடைத்த வெற்றி தொடர்பில் மாலைதீவு குடியரசின் வாழ்த்துக்களைத் தெரிவித்த வெளியுறவு அமைச்சர், தேர்தல் வெற்றிக்குப் பிறகு நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பில் மகிழ்ச்சி தெரிவித்தார்.

அத்துடன் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவுக்குப் பிறகு, வலுவான நாடாக எழுச்சியடைந்து வருவது தமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாகவும், மாலைதீவை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கு இலங்கையிடமிருந்து பாடம் கற்றுக் கொண்டிருப்பதாகவும் அப்துல்லா கலீல் சுட்டிக்காட்டினார்.

மாலைதீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளுமாறு வெளியுறவு அமைச்சர், இதன் போது ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார்.

இதேவேளை இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் மாலைதீவு ஆற்றிவரும் மகத்தான பங்களிப்பிற்கு ஜனாதிபதி பாராட்டு தெரிவித்தார்.

இதில் மாலைதீவு குடியரசின் தூதுவர் மசூத் இமாத், வெளியுறவு செயலாளர் பாத்திமத் இனாயா, அமீனாத் அப்துல்லா தீதி உள்ளிட்ட விருந்தினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(அ)

# விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்ட 11 மாணவர்கள் வைத்தியசாலையில்!

கொழும்பு, பெப். 22

கண்டி கலஹா பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் சேர்ந்த 11 மாணவர்கள் கடும் வெயிலில் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது, வெப்பத் தாக்கத்தால் நீர்ச்சத்து குறைபாடு மற்றும் காய்ச்சல் காரணமாக கலஹா பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

அதே நேரத்தில், உடல் நிலை மோசமாக இருந்த இரண்டு மாணவர்கள் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

11 மற்றும் 17 வயதுடைய இரண்டு மாணவர்கள் பேராதனை போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை பல பாடசாலைகளில் விளையாட்டு மைதானங்கள் இல்லாததால், அந்த மாணவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்து விளையாட்டு மைதானங்கள் உள்ள இடங்களுக்கு சென்று பயிற்சி செய்துவிட்டு,

பின்னர் மிகுந்த துயரத்துடன் பாடசாலைக்கு திரும்புவதையும் கிராமப்புற குழந்தைகள் சரியான காலை உணவை சாப்பிடாததும் அவர்களை பலவீனப்படுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதுஇருப்பினும், வெப்பம் அதிகமாக இருக்கும் ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இந்த விளையாட்டு நிகழ்வுகளை நடத்து வதற்குப் பதிலாக, பொருத்த மான நேரத்தை நிர்ணயிப்பது நல்லது என்றும் அதிக வெப்பநிலைக்கு ஆளாகும் குழந்தைகளுக்கு நீரிழப்பு கூட ஏற்படலாம் என்றும், கடுமை யான நோய் உயிரிழப்புக்கு கூட வழிவகுக்கும் என்றும் மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(அ)

# கேள்வி குறைவாக இருந்தால் வாகன வரியை குறைக்கலாம்

## பிரதி நிதியமைச்சர் அனில் ஜயந்த

கொழும்பு, பெப். 22

எதிர்பார்த்ததை விட கேள்வி குறைவாக இருந்தால், வாகனங்களுக்கான வரிகளை அரசு குறைக்கக்கூடும் என்று பிரதி நிதியமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுக் கையிருப்புகளை இழக்க நேரிடும் என்ற அச்சம் காரணமாகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

அந்நியச் செலாவணியில் வரம்பு இருப்பதால் மத்திய வங்கி ஒரு வழிகாட்டியை வழங்கியுள்ளது. விலையை அதிகரிக்க வரிகளை மாற்றுவதாகவும் அதன் பின்னரான நடப்பு விவகாரங்களை கருத்தில் கொண்டு இறக்குமதி வரிகளைக் குறைக்க முடியும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வங்கிகளில் கடன் கடிதங்களைத் திறப்பதில் ஆர்வம் இருந்த போதிலும் அதில் அதிகரிப்பு இல்லை. வாகனம் தொடர்பான வரிகளில் சுமார் 700 பில்லியன் ரூபாய் வருமானம் நாட்டுக்குக் கிடைக்கும்.

வாகன இறக்குமதிகள் வரிகளை வசூலிப்பதற்காக மட்டும் தளர்த்தப்படவில்லை. பொருளாதார அபிவிருத்திக்கு அது உதவும்.- என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் ஆபத்தான நிலையில் மகளிர் பாடசாலை கட்டடம்!



காரைதீவு, பெப்.22

**அம்பாறை, கல்முனை வலயத்திலுள்ள காரைதீவு இ. கி. ச. பெண்கள் பாடசாலை கட்டடம் மிகவும் அபாயகரமான நிலையில் காணப்படுகிறது.**

இந்தக் கட்டடத்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை காரைதீவு பிரதேச செயலாளர் ஜி. அருணன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த மூன்று மாடிக் கட்டடத்தில் முதலிரு தளங்களில் 08 வகுப்புகள் உள்ளன.

சுமார் 240 மாணவிகள் கல்வி கற்று வந்தனர்.

கீழ்த் தளத்தில் அதிபர் அலுவலகம் உள்ளிட்ட நிருவாக அலகு இயங்கி வந்தது.

கடந்த ஜனவரி மாதம் இந்த கட்டடத்தின் தூண்கள் தூர்ந்து தளங்கள் மோசமாகவும் தென்பட்டது.

அதைத் தொடர்ந்து அதிபர் எஸ். ரகுநாதன் உரிய அதிகாரிகளிடம் முறையிட்டார்.

மேலும், அந்த வகுப்புகளில் கற்ற மாணவிகளை உடனடியாக ஒன்று கூடல் மண்டபத்திலும் ஏனைய இடங்களிலும் மாற்றி வைத்திருக்கின்றார்.

இந்த நிலையில், காரைதீவு பிரதேச செயலாளர், கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் ,கல்முனை கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் ஆகியோர் எழுத்து மூலம் இக் கட்டடத்தை பாவிக்க வேண்டாம், மாணவிகளை வேறிடத்தில் வைக்குமாறும் அறிவுறுத்தல்களை வழங்கினர்.

இதுதவிர, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே. அச்சுதன் உள்ளிட்ட குழுவினரும் நேரடியாக வந்து பார்வையிட்டு நிலைமையை அறிவித்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப் பட்டது. (எ)


# அன்பின் முத்தங்கள் நூல் அறிமுக விழா

திருகோணமலை, பெப்.22

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் மைக்கல் கொலினின் "அன்பின் முத்தங்கள்" கவிதை நூல் அறிமுக விழா இன்று சனிக்கிழமை காலை 10. 00 மணியளவில் திருகோணமலைசிறீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் கனக தீபகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்கு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் க. மகேசன் முதன்மை விருந்தினராகவும், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே. குணநாதன் சிறப்பு விருந்தினராகவும், கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் நா. மணிவண்ணன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (எ)

# தாய்மொழி தின நிகழ்வுகள்



சாய்ந்தமருது, பெப்.22

கல்வியமைச்சின் அறிவுறுத்தல்களின் பேரில் சர்வதேச தாய்மொழி தினமான பெப்ரவரி 21 ஆம் திகதி "அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான மொழி" எனும் தொனிப்பொருளில் அம்பாறை, சாய்ந்தமருது அல் - ஜலால் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் டி. கே. எம். சிராஜ் தலைமையில் சர்வதேச தாய்மொழி தின நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

இதன்போது, தாய் மொழியின் முக்கியத்துவம் மற்றும் ஏனைய மொழிகளை மதிக்கும் தன்மை தொடர்பில் பிரதி அதிபர் எம். ஏ. எம். சிராஜ், மாணவர்களுக்கு விளக்கமளித்தார்.

மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாணவர்களின் விசேட பேச்சு நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-06)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை ஆரம்பியுங்கள்

## அஷ்ரப் தாஹிர் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, பெப்.22

அம்பாறை மாவட்டம் ஒலுவிலில் உள்ள தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மிக நீண்ட நாள் தேவையாகவும், கோரிக்கையாகவும் இருந்து வருகின்ற மருத்துவ பீடமொன்றை அமைப்பதற்காக ஒவ்வொரு அரசாங்கத்திடமும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்திருந்தாலும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கங்களைப் போன்று இந்த அரசாங்கமும் இருக்கக்கூடாது என்றும் இந்த விடயத்தில் கூடுதல் கவனமெடுத்து செயல்படுமாறும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்ட வாசிப்பின் மீதான விவாதங்களின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "தென்கிழக்கு பல்கலைக்கழகம் அமைந்திருக்கும் பிரதேசம் விவசாயத்துக்கு பெயர் போன பிரதேசமாக காணப்படுவதனால் இப் பல்கலைக்கழகத்துக்கு விவசாய பீடமொன்றை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

குறித்த வரவு - செலவுத் திட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு கிழக்கு மாகாணத்தின் தேவைகளை நிவர்த்திக்கும் வகையில் அதிக ஒதுக் கீடுகளை செய்து தர வேண் டும்"- என்றார். (எ)

# "கல்விப் பணியில் சவால்களும் சாதனைகளும்" நூல் வெளியீடு

கல்முனை,பெப்.22

ஓய்வுநிலை அதிபர் எம். எல். எம். இஸ்மாயில் எழுதிய "கல்விப் பணியில் சவால்களும் சாதனைகளும்" என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 04.00 மணிக்கு சிம்பலாகஸ் கொட்டுவ மதீனா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் கவிஞர் ரவூப் ஹஸீர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அதிபர் இஸ்மாயில், கொழும்பு பல்கலைக் கழகத்தின் சமூகவியல் துறை பேராசிரியர் எம். டி. எம் மஹீஷ், ஓய்வு பெற்ற வடமேல் மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் யூ. எம் பி. ஜெயந்திலா ஆகியோர் கலந்து சிறப் பிக்கவுள்ளனர். (எ)

# மூன்று வர்த்தகர்களுக்கு 20, 000 ரூபாய் அபராதம்!

கல்முனை, பெப்.22

காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு 20, 000 ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

அம்பாறை, சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எம். எம். நௌசாத் ஆலோசனைக்கமைய சுகாதார வைத்திய அதிகாரிகளால் கடந்த 19 ஆம் திகதி சம்மாந்துறை புறநகர் பகுதியிலுள்ள கடைகள் மற்றும் விற்பனை நிலையங்களில் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக தொடரப்பட்ட 3 வழக்குகளில் 20, 000 (10000, 5000, 5000) ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தி னம் குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக இவ்வாறு தண்டப்ப ணம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (எ-01)

# சம்மாந்துறையில் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம்

கல்முனை, பெப்.22

கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தை வினைத்திறன் மிக்கதாக முன்னெடுப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

குறித்த திட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி சம்மாந்துறை பிரதேசம் பூராக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. குறிப்பாக கல்லரிச்சல் பிரதேசம், மஸ்ஜிதுல் உம்மாவினை அண்மித்த பிரதேசம், அல் மர்ஜான் பாடசாலை அருகாமையில் ஆகிய மூன்று இடங்களிலும் பிரதானமாக கிளீன் சிறீலங்கா [illegible] நடை பெறவுள்ளன. (எ)

# பஸ் சாரதி, நடத்துநர் மீது மட்டக்களப்பில் தாக்குதல்

## இருவர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு, பெப்.22

இலங்கை போக்குவரத்து சபை பேருந்தில் பயணித்த யுவதி ஒருவரை அந்த பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் கேலி செய்ததாக சாரதியையும் நடத்துநரையும் தாக்கிய இருவர் நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு புல்லுமலை பிரதேசத்தில் வைத்து கரடியனாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பதுளையிலிருந்து புல்லுமலை ஊடாக மட்டக்களப்பு வரை போக்குவரத்தில் ஈடுபட்டுவரும் இ. போ. ச. பஸ்ஸில் பயணித்த புல்லுமலை பிரதேசத்தைச் சேர்ந்த யுவதி ஒருவரை நேற்று முன்தினம் சாரதியும் நடத்துநரும் கேலி செய்ததாக அந்த யுவதி தனது உறவினரிடம் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர், அந்த பஸ் மட்டக்களப்பிலிருந்து பதுளை நோக்கி மாலை 05.30 மணிக்கு சேவையை ஆரம்பித்ததையடுத்து, அந்த பஸ் புல்லுமலை பகுதியிலுள்ள தரிப்பிடத்தில் பயணிகளை ஏற்றுவதற்காக நிறுத்தப்பட்டது.

அப்போது, தரிப்பிடத்தில் காத்திருந்த இருவர் சாரதி மற்றும் நடத்துநருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு தாக்குதலிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் தாக்குதலில் ஈடுபட்ட அதே பகுதியைச் சேர்ந்த இருவரையும் கைது செய்ததாக பொலிஸார் கூறினர்.

கைதான இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் விபத்துக்குள்ளான

# விமானப் பயணிகளுக்கு ரூ. 88 இலட்சம் இழப்பீடு!

ஒட்டாவா, பெப்.22

கனடாவில் விபத்துக்குள்ளான விமானத்தில் பயணித்த பயணிகளுக்கு இலங்கை பெறுமதில் தலா 88 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி அமெரிக்காவின் மினியாபோலிஸ் நகரிலிருந்து டெல்டா ஏர் லைன்ஸ் விமானம் கனடாவின் ரொரண்டோவுக்கு சென்றது. சி. ஆர். ஜே - 900 என்ற அந்த விமானத்தில் 4 பணியாளர்கள் உட்பட 80 பயணிகள் பயணித்தனர். விமானம் ரொரண்டோ விமான நிலையத்தில் தரையிறங்கிய போது திடீரென கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்குள்ளானது. இதனால், விமானம் அப்படியே தலைகீழாக கவிழ்ந்தது.

இதனால், விமானத்துக்குள் இருந்த பயணிகள் அலறினர். இந்த விபத்தில், 20 பயணிகள் காயமடைந்தனர். 3 பேர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த நிலையில் விபத்து நடைபெற்றபோது சி. ஆர். ஜே-900 எல்.ஆர். விமானத்தில் இருந்த பயணிகள் அனைவருக்கும் இலங்கை பெறுமதில் தலா 88 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்குவதாக டெல்டா ஏர்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. டெல்டா ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் இந்த அறிவிப்பு பயணிகளுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (எ)



# உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சர்வாதிகாரி!

## நாட்டைவிட்டு வெளியேறும் சூழல் ஏற்படும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை

வாஷிங்டன், பெப்.22

**உக்ரைனில் தேர்தல் நடத்தாவிடில் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழல் ஏற்படும் என்று அந்த நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கிக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். அத்தோடு, ஜெலன்ஸ்கி சர்வாதிகாரியாக செயல்படுகிறார் என்றும் ட்ரம்ப் சாடியுள்ளார்.**



உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் கடந்த 3 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர ட்ரம்ப் முயற்சித்து வருகிறார்.

உக்ரைனில் 2019இல் நடந்த தேர்தலில் வென்று ஜெலன்ஸ்கி ஜனாதிபதியானார். கடந்தாண்டுடன் அவருடைய பதவிக்காலம் முடிவடைந்தது. உக்ரைன் சட்டங்களின்படி, நாட்டில் போர் நடக்கும் நேரத்தில் தேர்தல் நடத்தத் தேவையில்லை.

இந்த நிலையில், ட்ரம்ப் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனுடன் சேர்ந்து போர் நீடித்திருக்க ஜெலன்ஸ்கி நாடகமாடியுள்ளார். உக்ரைன் ஜனாதிபதித் தேர்தலை நடத்த விடாமல் ஜெலன்ஸ்கி சர்வாதிகாரி போல் செயல்படுகிறார். உக்ரைனில் தேர்தல் நடத்தாவிடில் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழல் ஏற்படும்.

2019 ஆம் ஆண்டு தேர்தலில் வென்று ஜெலன்ஸ்கி ஜனாதிபதியான நிலையில் கடந்தாண்டுடன் அவர் பதவிக் காலம் நிறைவடைந்துவிட்டது. ரஷ்யா - உக்ரைன் இடையேயான போரை நிறுத்துவதற்கான முழு முயற்சியில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். அதில் வெற்றியும் பெறுவோம்-

இவ்வாறு ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் மீதான போர் விவகாரத்தில் ட்ரம்ப் ரஷ்யாவால் தவறாக வழிநடத்தப்படுகிறார். நாட்டில் போர் நடக்கும் நேரத்தில் தேர்தல் நடத்தத் தேவையில்லை என உக்ரைனில் சட்டம் உள்ளது.

போருக்கு உக்ரைன் தான் காரணம் என ட்ரம்ப் கூறுவது தவறானது. இது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதியை நேரில் சந்தித்து பேச தான் விரும்புவதாக ஜெலன்ஸ்கி கூறியிருந்தார். ஆனால், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை சர்வாதிகாரி என்று சாடி ட்ரம்ப் எதிர்வினை யாற்றியுள்ளமை சர்வதேச ரீதியில் கவனம் ஈர்த்துள்ளது. (எ)

# "இஸ்ரேல் அரசுக்கு மிக கடினமான நாள்"



காஸா, பெப்.22

பணயக் கைதிகளின் உடல்களை பெறும் இந்த நாள் இஸ்ரேல் அரசுக்கு மிகவும் கடினமான நாள் என்று அந்த நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.


பணயக் கைதிகளில் இறந்துபோன 4 இஸ்ரேலியர்களின் உடல்களை ஹமாஸ் அமைப்பு, இஸ்ரேலிடம் ஒப்படைக்க முடிவு செய்தது. ஷிரி பிபஸ் என்ற பெண், அவரது குழந்தைகள் ஏரியல், கிபிர் மற்றும் பத்திரிகையாளர் ஓடட் லிப்ஷிட்ஸ் ஆகியோரின் உடல்கள் நேற்று ஒப்படைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன்படி, தெற்கு காஸாவின் கான் யூனிஸ் பகுதியில் வைத்து, 4 பேரின் உடல்களும் சர்வதேச செஞ்சிலுவை குழுவிடம் ஒப்படைக்கப் பட்டன.

உடல்கள் ஒப்படைப்பு குறித்த தகவலை மிகவும் வேதனையுடன் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு

அதில், "இது இஸ்ரேல் அரசுக்கு மிகவும் கடினமான, ஒரு கொந்தளிப்பான, ஒரு துக்க நாளாக இருக்கும். வீழ்ந்த எங்கள் அன்பிற்குரிய நான்கு பணயக்கைதிகளை தாயகத்திற்கு கொண்டு வருகிறோம். எனது இதயமும் முழு நாட்டின் இதயமும் கிழிந்துள்ளது. முழு உலகின் இதயமும் கிழிந்திருக்க வேண்டும், ஏனென்றால் இங்கு நாம் யாருடன், எதைக் கையாள்கிறோம், எப்படிப்பட்ட அரக்கர்களை சமாளிக்கிறோம் என்பதைப் பார்க்கவேண்டும். மிகவும் வேதனையாக உள்ளது. ஆனால் இதுபோன்ற ஒரு சம்பவம் மீண்டும் நடக்காமல் இருப்பதை உறுதி செய்வதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்" என குறிப்பிட்டுள்ளார். (எ)

# நடுவானில் மோதிய இரண்டு விமானங்கள்

## அமெரிக்காவில் தொடரும் சோகம்



அரிசோனா, பெப்.22

அமெரிக்காவில் 2 சிறிய ரக விமானங்கள் நடுவானில் மோதி விபத்தில் சிக்கியதில் இருவர் பலியாகினர்.

அரிசோனா மாகாணத்தில் மரானா பகுதியில் அமைந்துள்ள விமான நிலையத்தில் நேற்றுக் காலை 08. 28 மணியளவில் புறப்பட்டு சென்ற செஸ்னா 172எஸ் என்ற விமானமும், லன்கெய்ர் 360 எம்.கே. 2 விமானமும் நடுவானில் ஒன்றுடன் ஒன்று மோதி தீப்பிடித்து எரிந்தன.

இந்தச் சம்பவத்தில் 2 விமானங்களில் இருந்த தலா ஒருவர் உயிரிழந்தனர். இந்த விபத்து பற்றி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் சமீப காலங்களாக விமான விபத்துச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதி, வர்த்தக ஜெட் விமானம் மற்றும் இராணுவ ஹெலிகொப்டர் தலைநகர் வாஷிங்டனில் மோதிக் கொண்டதில் 67 பேர் உயிரிழந்தனர்.

ஜனவரி 31ஆம் திகதி பிலடெல்பியாவிலிருந்து மருத்துப் பொருட்களை ஏற்றிச் சென்ற விமானம் விபத்தில் சிக்கியதில் அதிலிருந்த 6 பேரும் உயிரிழந்தனர். பெப்ரவரி முதல் வாரத்தில், மேற்கு அலாஸ்காவில் சிறிய ரக விமானம் ஒன்று நோமி பகுதியில் விபத்தில் சிக்கியதில் அதிலிருந்த 10 பேரும் பலியாகினர்.

கடந்த 2 வாரங்களில் இது போன்ற பெரும் விபத்துக்களை அமெரிக்க விமான போக்குவரத்து துறை எதிர்கொண்டுள்ளது. இதுபற்றி துறை ரீதியிலான விசாரணையும் நடந்து வருகிறது. இந்தச் சூழலில் நேற்று 2 சிறிய ரக விமானங்கள் நடுவானில் மோதி விபத்தில் சிக்கியதில் 2 பேர் பலியாகினர். (எ)

# குடும்பத் தலைவிகளுக்கு 8500 ரூபாய் வழங்கப்படும்

## டில்லி முதல்வர் ரேகா குப்தா

புதுடில்லி, பெப்.22

எதிர்வரும் மார்ச் மாதம் முதல் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் தோறும் இலங்கை பெறுமதியில் 8,500 ரூபாய் வழங்கப்படும் என்று டில்லி முதல்வர் ரேகா குப்தா அறிவித்துள்ளார்.

புதுடில்லி - ராம்லீலா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் டில்லி முதல்வராக ரேகா குப்தா பதவியேற்றுக் கொண்டார்.

இதன்போது, பா. ஜ. க. தேர்தல் அறிக்கையில் கூறியபடி, குடும்பத் தலைவிகளுக்கு மாதம் தோறும் இலங்கை பெறுமதியில் 8,500 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். அடுத்த மாதம் 8ஆம் திகதி வங்கிக் கணக்கில் இத்தொகை செலுத்தப்படும் என்று அவர் அறிவித்துள்ளார். (எ)

# முதலாளிகளை ஊக்குவிக்கும் மோடி அரசு

ரேபரலி, பெப்.22

நாட்டில் பணவீக்கம் அதிகரித்து வருவதை பற்றிக் கவலைப்படாமல் மோடி அரசு முதலாளிகளை மட்டும் ஊக்குவித்து வருவதாக இந்திய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.


உத்தர பிரதேச மாநிலம் ரேபரலி தொகுதியின் எம்.பியான ராகுல் காந்தி நேற்று முன்தினம் அங்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 6 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி




டுபாய், பெப்.22

பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதின.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 49. 4 ஓவர்களில் 228 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. தவுஹித் ஹிரிடோய் சதமடித்து அசத்தினார்.

இந்திய அணி தரப்பில் முகமது ஷமி அபாரமாக பந்துவீசி 5 விக்கெட்களை வீழ்த்தினார். இதையடுத்து 229 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி விளையாடியது.

இதில் ரோஹித் சர்மா 41 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.மறுபுறம் நிலைத்து நின்று விளையாடிய சுப்மன் கில் 101 ஓட்டங்கள் சேர்த்தார். இறுதியில் இந்திய அணி 46. 3 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 231 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷை வீழ்த்தி இந்திய அணி அபார வெற்றி பெற்றது. (எ)

## விபத்தில் சிக்கிய கங்குலி



கொல்கத்தா, பெப்.22

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சவுரவ் கங்குலி பயணித்த கார் விபத்தில் சிக்கிய நிலையில் அவர் காயமின்றி தப்பினார்.

நேற்று முன்தினம் இரவு மேற்கு வங்க மாநிலம் ஹூக்ளியில் துர்காபூர் வீதியில் கங்குலி பயணித்துள்ளார்.

அப்போது, திடீரென லொறி ஒன்று வேகமாக அவர்களது காரை முந்திச் சென்றுள்ளது. இதன் மீது மோதாமல் இருக்க கங்குலி பயணித்த காரின் சாரதி முயற்சித்துள்ளார். இதனால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், கங்குலியின் காரை பின் தொடர்ந்து வந்த கார்கள் ஒன்றோடு ஒன்று மோதியுள்ளன. மேலும், கங்குலி பயணித்த கார் மீதும் மோதின. இதில் கங்குலி உட்பட யாருக்கும் காயம் ஏற்படவில்லை. (எ)

## காலிறுதி போட்டியில் அல்காரஸ் தோல்வி!




டோஹா, பெப்.22

கட்டார் ஓபன் ரென்னிஸ் தொடர் காலிறுதியில் அல்காரஸ் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ள இந்த ரென்னிஸ் தொடர் டோஹாவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் செக் குடியரசின் ஜிரி லெஹெக்காவுடன் மோதினார்.

இதில் முதல் 2 செட்களை ஆளுக்கு ஒன்றாக கைப்பற்றிய நிலையில், 3ஆவது செட்டை ஜிரி லெஹெக்கா கைப்பற்றி அல்காரஸுக்கு அதிர்ச்சி கொடுத்தார். இந்த ஆட்டத்தில் அல்காரஸ் 3 - 6, 6 - 3 மற்றும் 4 - 6 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார். (எ)

## அரினா சபலெங்கா அதிர்ச்சி தோல்வி!



டுபாய், பெப்.22

டுபாயில் நடைபெற்று வரும் சர்வதேச ரென்னிஸ் தொடர் போட்டியில் அரினா சபலெங்கா அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

டுபாய் சர்வதேச ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வருகிறது. இதில், மகளிர்

ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் "நம்பர் 1" வீராங்கனையான பெலாரஸை சேர்ந்த அரினா சபலெங்கா, டென்மார்க்கை சேர்ந்த கிளாரா டாசனுடன் மோதினார். ஒரு மணி 22 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சபலெங்கா 3 - 6, 2 - 6 என்ற நேர் செட்டில் அதிர்ச்சிதோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார். (எ)

## விராட் கோலி முதலிடம்


டுபாய், பெப்.22

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக பிடியெடுப்பு செய்த இந்திய வீரர்கள் பட்டியலில் விராட் கோலி முதலிடம் பிடித்தார்.ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி 2 பிடியெடுப்பு செய்தார். இதனையும் சேர்த்து இதுவரை அவர் ஒருநாள் போட்டிகளில் 156 முறை பிடியெடுப்பு செய்துள்ளார். இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிக பிடியெடுப்பு செய்த இந்திய வீரர்களின் மாபெரும் சாதனை பட்டியலில் முகமது அசாருதீனுடன் விராட் கோலி முதலிடத்தை பகிர்ந்துள்ளார். (எ)



## ஐ. சி. சி. ஒருநாள் தொடர் ஷமி மாபெரும் சாதனை



டுபாய், பெப்.22

ஐ. சி. சி. ஒருநாள் தொடரில் முகமது ஷமி மாபெரும் சாதனை படைத்துள்ளார்.

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதின. இதில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

இந்தியா தரப்பில் முகமது ஷமி 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இந்த 5 விக்கெட்களையும் சேர்த்து ஐ. சி. சி. நடத்தும் ஒருநாள் தொடர்களான உலகக் கிண்ணம் மற்றும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர்களில் இதுவரை 60 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார்.

இதன் மூலம் ஐ. சி. சி. ஒருநாள் தொடர்களில் அதிக விக்கெட்கள் கைப்பற்றிய இந்திய பந்துவீச்சாளர் என்ற மாபெரும் சாதனையை ஷமி படைத்துள்ளார். இதற்கு முன்னர் ஜாகீர் கான் 59 விக்கெட்கள் வீழ்த்தி முதலிடத்தில் இருந்தார். தற்போது அவரை முந்தி ஷமி முதலிடம் பிடித்துள்ளார். (எ)

## பாகிஸ்தான் அணிக்கு பெரும் பின்னடைவு

கராச்சி, பெப்.22

காயம் காரணமாக பாகிஸ்தான் அணியின் முக்கிய வீரர் பஹர் ஜமான் விலகியுள்ளார்.

9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது. இதில், பங்கேற்றுள்ள 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

"ஏ" பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, பங்களாதேஷ் அணிகளும், "பி" பிரிவில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான் அணிகளும் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இதில் தொடக்க நாளான கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்து அணியிடம் நடப்பு சம்பியன் பாகிஸ்தான் தோல்வியைத் தழுவியது. இதனால் எதிர்வரும் 2 போட்டிகளிலும் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற நெருக்கடியில் பாகிஸ்தான் உள்ளது.

முன்னதாக நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் தொடக்க முன்னணி வீரரான பஹர் ஜமான் களத்தடுப்பு செய்கையில் கால்முட்டியில் காயமடைந்தார். இதனால் எஞ்சிய போட்டிகளில் இருந்து அவர் விலகியுள்ளார்.

இவரது விலகல் பாகிஸ்தானுக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. அவருக்கு பதிலாக இமாம் உல்-ஹக் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீன...

ஆதரவுடனான திட்டங்கள் அண்மைக் காலமாக அதிகளவில் நடைபெறுகின்றன. அத்துடன், சீன பிரமுகர்கள் வடக்கு, கிழக்குக்கு வருகை தரும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன. எனினும், சீனாவின் உயர் அமைச்சர் ஒருவர் வடக்குக்கு உத்தியோகபூர்வமாக வருகை தருவது அண்மைக்காலத்தில் இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள அமைச்சர் பான் யூ, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் அமைச்சரவையில் முக்கிய உறுப்பினராவார். அத்துடன், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்திய...

- வடக்கில் குறிப்பாக, எமது தீவக பிரதேசத்தை கடுமையாக பாதித்து வருகின்றது. இதை நிறுத்துமாறு நாம் பல போராட்டங்கள் கோரிக்கைகளை முன்வைத்தாலும் அதற்கான தீர்வு கிடைக்கவில்லை.

இந்நிலையில், எமது வாழ்வுரிமைக்கான பொருளாதார ஈட்டலை உறுதி செய்ய நாம் வீதிக்கு இறங்கி போராட தீர்மானித்துள்ளோம். அதனடிப்படையில் தீவக கடற்றொழில் அமைப்புக்களான மண்டைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, வேலணை, புங்குடுதீவு உள்ளிட்ட கடற்றொழில் அமைப்புகள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுக்க உள்ளோம்.

எதிர்வரும் 27ஆம் திகதி - வியாழக்கிழமை யாழ்ப்பாணம் - பண்ணையில் உள்ள கடல்வள நீரியல் திணைக்களம் முன்பாக ஆரம்பித்து ஆளுநர் அலுவலகம் வரை ஊர்வலமாக செல்லவுள்ளது. அத்துடன், ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் வழங்கவுள்ளோம். (ஐ-05)

## வடக்கு...

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களை நட்பு ரீதியாக தனது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஒரேயொரு இராஜதந்திர உறவுகளை முன்னெடுக்கும் ஒரேயொரு நிறுவனம் இந்திய துணைத் தூதரகமே. இங்கு 2010ஆம் ஆண்டு தூதரகத்தை ஆரம்பித்தோம். பொதுவாக, மறைய நாடுகள் கொழும்பிலேயே தமது தூதரகங்களை அமைத்துள்ளன. தூதரகங்களின் பொதுவான சேவைகள் தங்களின் நாட்டு மக்களுக்கான நலன்களை பார்ப்பது அல்லது பொருளாதார ரீதியான ஒத்துழைப்புகளை ஏற்படுத் துவதே முக்கிய கடமையாக இருக்கும். ஆனால், இங்கு தூதரகத்தை நாம் ஆரம்பித்தது வடக்கு மக்களுக்காகவே - இங்குள்ள மக்களுக்கு சேவை யாற்றவே.

இந்தியாவால் 50 ஆயிரம் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. இதில், 47 ஆயிரம் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் சில ஆயிரம் கொடுக்கப்படவுள்ளன.

தவிர, இந்தியாவிலிருந்து பிரதமர் இங்கு வரும்போதே அல்லது இலங்கையிலிருந்து ஜனாதிபதி ஒருவர் அங்கு செல்லும்போதோ அல்லது உயர்மட்ட சந்திப்புகளின் முடிவில் ஊடக வெளியீடுகளை பார்த்தால் அதில் இருக்கும் விடயங்கள் 75 - 80 வீதமானவை வடக்கு தொடர்பானவை. அடுத்து, கிழக்கு மாகாணம் தொடர்பானவை. மூன்றாவது இடத்திலேயே மத்திய அரசாங்கம் தொடர்பாக இருக்கும்.

மற்ற நாடுகளுக்கான இராஜந்திர உறவுகளுக்கும் எமது நாட்டுக்குமான இராஜதந்திர உறவுகளுக்கும் இடையே வித்தியாசம் உள்ளது. மற்றவர்கள் இங்கு வந்து விட்டு திரும்பிவிடுவார்கள். நாம் மட்டுமே நிரந்தரமாக உங்களுடனேயே இருக்கிறோம்.

வடக்கில் நாம் செயல்படுத்தும் சகல திட்டங்களையும் நாம் மானியமாகவே வழங்குகிறோம் - என்றும் கூறினார். (ஐ)

## மக்களின்...

பாராளுமன்றத்தில் நேற்று நடந்த வரவு - செலவு திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் மக்கள் ஆணையை பெற்றுக்கொள்ள முன்வைத்த கொள்கை பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்களில் எந்தளவு விடயங்கள் வரவு - செலவு திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன என்பதை பார்க்க வேண்டும். அரசாங்கம் மக்களுக்கு வாக்குறுதி அளித்த பிரகாரம் வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படவில்லை என்பதே எமது நிலைப்பாடு. குறிப்பாக அரசாங்கத்தின் வளமான நாடு அழகான வாழ்கை என்ற கொள்கை பிரகடனத்தில், மாற்று கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வை கொண்டு வருவோம் என்று கூறப்பட்டாலும், அந்த வாக்குறுதியை கைவிட்டு, இன்று மக்கள் மீது பெரும் அசௌகரியத்தையும் அழுத்தத்தையும் சுமத்தி, மக்களுக்கு நலன்புரி ஒதுக்கீடுகளை வரையறுக்கின்ற 2024 நிதி முகாமைத்துவச் சட்டத்தின் பிரகாரம் அடிப்படைச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 வீதம் , முதன்மை இருப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 வீதம் என்பது அரசாங்கத்தின் வாக்குறு அல்ல. இது அரசாங்கம் பெற்றுக்கொண்ட மக்கள் ஆணையை காட்டிக்கொடுப் பதாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடு, சர்வதேச பிணைமுறி இணக்கப்பாடுகள் உண்மையாகவே மக்களுக்கு பாதிப்பான ஒப்பந்தமாகும். இதன்மூலம் நாணய நிதியத்தின் வேலைத்திட்டங்களில் இருந்து விலகிக்கொள்ளுமாறு நாங்கள் தெரிவிப்பதில்லை. மாறாக மக்களுக்கு பொருத்தமான புதிய பயணம் ஒன்றுக்கு அரசாங்கத்துக்கு சென்றிருக்க முடியும். ஆரம்ப செலவு மற்றும் ஆரம்ப நிலுவையை அவ்வாறு வரையறை செய்யும்போது அது நாட்டின் முன்னேற்றத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. இவ்வாறு நாணய நிதியத்தின் ஒப்பந்தம் தொடர்பில் அரசாங்கம் அன்று தெரிவித்த அனைத்தையும் மறந்துவிட்டு மக்கள் ஆணையை காட்டிக்கொடுத்திருக்கிறது - என்றார். (ஐ)

## புதிய...

மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த ஜனவரி 27ஆம் திகதி கடிதம் ஒன்றை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானத்திடம் வழங்கினார்.

இந்த விடயம் தொடர்பில் மத்திய குழுவில் கலந்துரையாடி பதில் தருவதாக உறுதியளிக்கப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து மட்டக்களப்பில் நடந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கஜேந்திரகுமாரின் அழைப்பு தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே மத்திய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் சீ. வீ. கே. சிவஞானம் கஜேந்திரகுமாருக்கு கடந்த 18ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தற்போதைய அரசாங்கம் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பதாலும் அதற்கான முன்வரைவு எதையும் சமர்ப்பிக்காத நிலையிலும் நாம் அரசமைப்பு வரைவு பற்றி இப்போது விவாதிப்பது பொருத்தமானதாகக் காணப்படவில்லை என உணரப்பட்டது.

மேலும் எமது கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து வலியுறுத்தி வரும் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடு இன்னும் வலுவுள்ளதாகவே பேணப்படும் என்பதும் தெரிவிக்கப்பட்டது. எனினும், அரசாங்கம் அதன் அரசமைப்பு உருவாக்க முன்மொழிவை துரிதமாக முன்வைக்க வேண்டும் என வலியுறுத்தி கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. உரிய நேரம் வரும்போது இந்த விடயம் பற்றி நாம் கலந்துரையாடலாம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# சஞ்சீவ கொலையாளிக்கு உதவிய பெண்ணும் கைது!

கொழும்பு, பெப். 22

கொழும்பு - புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட கணேமுல்லை சஞ்சீவ கொலை சந்தேக நபருக்கு உதவிய பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மஹரகம பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த பெண் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

கைதான பெண் கொலை சந்தேகநபரான தில்ஷான் என்பவரின் காதலி என்று கூறப்படுகின்றது. சஞ்சீவவை கொல்வதற்காக சட்டத்தரணி உடையில் கொலையாளி சென்றிருந்தார். அப்போது, குறித்த பெண்ணே குற்றவியல் சட்டப் புத்தகத்துக்குள் துப்பாக்கியை கடத்தி உதவியிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

சஞ்சீவவை கொலைசெய்த பின்னர், துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தனது காதலியுடன் நாட்டை விட்டு வெளியேற முயன்றமை தெரியவந்துள்ளது.

இதற்காக அந்தப் பெண்ணை நீர்கொழும்புக்கு அழைத்துச் செல்ல ஒரு நபர் மஹரகம பகுதிக்கு வந்துள்ளார். அந்த நபரை கைது செய்த பொலிஸார் அவர் மூலமாக கொலை சந்தேகநபரின் காதலியையும் கைது செய்தனர் என்று தெரியவருகின்றது. (ஐ)

## கொழும்பில்...

இடம்பெற்றுள்ளது.

இதேநேரம், நீர்கொழும்பிலும் நேற்றைய தினம் வர்த்தகர் ஒருவரை நோக்கி துப்பாக்கியால் சுட்டு கொல்லும் முயற்சி இடம்பெற்றுள்ளது. எனினும், துப்பாக்கி செயலிழந்ததால் அவர் உயிர் தப்பினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நாட்டில் கடந்த 4 தினங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் ஐவர் கொல்லப் பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வாய்...

புற்றுநோய் ஏற்படுவதற்கு முன்னர் அதன் ஆரம்ப அறிகுறிகள் தென்படும். எனவே, ஆரம்ப நிலையில் நோயை கண்டறிந்தால், 90 வீதம் வரை கட்டுப் படுத்த முடியும். இதன் முக்கிய காரணிகளாக புகையிலை மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களின் பயன்பாடு, மதுபானம், பாக்கு மற்றும் வைரஸ் தொற்றுகள் உள்ளன.

இன்றைய சூழலில், பாடசாலை மாணவர்களிடையே புகைப்பழக்கம் அதிகரித்து வருவதால் அவர்களுக்குள் வாய் புற்றுநோய்க்குரிய ஆரம்ப அறிகுறிகள் காணப்படுகின்றன - என்றும் கூறினார். (ஐ)

## மார்ச்...

எதிர்வரும் மார்ச் மாதத்தின் பல நாட்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மழை கிடைக்கும் நாட்களாக அமையும் என்பது மகிழ்ச்சியான செய்தி.

அயன இடை ஒருங்கல் வலய செயல்பாட்டால் தூண்டப்பட்ட மேற்காவுகை ( வெப்ப சலனம் ) காரணமாகவே மார்ச் அதிகளவிலான மழை நாட்கள் நிலவ வாய்ப்புண்டு. ஆனால், மார்ச் மாதத்தில் கிடைக்கவுள்ள மழை மேற்காவுகை மழை என்பதனால் இடி, மின்னல் நிகழ்வுகள் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம்.

பொதுவாக மார்ச், ஏப்ரல் மாதங்களில் அதிக மழை கிடைப்பது நீர் வள ரீதியாக எமக்கு நன்மையானது. ஏனெனில், இந்த மழை எமது தரைக் கீழ் மற்றும் தரை மேற்பரப்பு நீர்வள மீள் நிரப்புகையில் அதிகம் செல்வாக்கு செலுத்தும். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் சிறுபோக நெற் செய்கை இக்காலத்தில் ஆரம்பிக்கும் என்பதனால் மேற்குறிப்பிட்ட மழை நாட்களைக் கருத்தில் கொள்ளுமாறு விவசாயிகள் வேண்டப்படுகிறார்கள்.

எதிர்வரும் 26ஆம் திகதி முதல் மார்ச் முதலாம் திகதி வரை இலங்கையின் கிழக்கு, தென்கிழக்கு மற்றும் தெற்கு கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் அதேவேளை இக்காலத்தில் வடக்கு கடற்பகுதிகள் அதிக உயரம் கொண்ட அலைகளைக் கொண்டதாக காணப்படும். எனவே வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மீனவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு செயல்படுவது சிறந்தது - என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பேரருட்திரு...

ஆண்டகையின் செயலாளராக பணியாற்றியவர்.

மன்னார் - அடம்பனில் 1965 ஜூலை 12ஆம் திகதி பிறந்த இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள புனித பிரான்சிஸ் சேவியர் மேஜர் செமினரியில் தத்துவம் மற்றும் இறையியல் கற்றார்.

அர்ச்சகத்துக்குப் பின்னர் இவர், முருங்கன் (1994 - 1996), ஆயரின் செயலாளர் (1996 - 1999), செட்டிக்குளம் (1999 - 2003), பள்ளிமுனை (2003 - 2006), திருச்சபை பாதிரியார் (2003 - 2006) ஆகிய பொறுப்புகளை வகித்தார். வான் கலை (2006-2009), மறைமாவட்ட மைனர் செமினரியின் ரெக்டர் (2014-2018), மற்றும் சென். செபஸ்தியன் கதீட்ரல் (2018-2021) மற்றும் பேசாலை (2021-2023) ஆகியவற்றின் பாதிரியார்.

அமெரிக்காவின் நியூயார்க்கில் (2010-2014) உள்ள ஃபோர்டாம் பல்கலைக்கழகத்தில் மதக் கல்வியில் உரிமம் பெற்ற பிறகு, இந்தியாவில் இளைஞர் மேய்ச்சல் பராமரிப்பு படிப்பில் (2022) பயின்றார்.

2023 ஆம் ஆண்டு முதல் அவர் மன்னாரில் உள்ள மடு மாதா ஆலயத்தின் நிர்வாகியாகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடக்குக்கான...

முகாமிடுகின்றனர்.

வடக்கு என்பது ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியது. எனினும், வன்னிக்கு பெரிதாக எவரும் வருவதில்லை. தேர்தல் காலங்களில் வருசூழ்நிலை காணப்படுகின்றது. எனவே, வன்னி தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். வரவு - செலவு திட்டத்தில் வடக்குக்கு ஒதுக்கப்பட்டுள்ள பெருமளவான நிதி வன்னிக்கு வருமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது?" - எனவும் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு நிதி ஒதுக்க வேண்டாம் எனக் கூறவில்லை. ஒதுக்கப் படும் நிதி ஏனைய மாவட்டங்களுக்கும் வர வேண்டும் என்பதே எனது கோரிக்கை. உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி வன்னிக்கும் வரவேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன்." - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கொலை...

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் சாமர சம்பத் தசநாயக்கவின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொலை சந்தேகநபர் வாகனத்தில் வைத்து கைது செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்களில் அவர் நிம்மதியான மனநிலையில் இருந்தார் என்றும் கைது செய்த அதிகாரிகள் அவரை நட்பு ரீதியாக நடத்தியமை தொடர்பிலும் தசநாயக்க எம். பி. கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பொது பாதுகாப்பு அமைச்சர், கொலை சந்தேகநபர் கைது செய்யப்பட்டபோது எடுக்கப் பட்ட படங்களில் சில ஏ. ஐ. தொழில் நுட்பத்தை பயன்படுத்தி திருத்தப்பட்டுள்ளன. ஏ. ஐ. குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அடக்குமுறையின் வடிவம் தையிட்டி திஸ்ஸ விகாரை!

## சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 22

**அடக்குமுறையின் வடிவமாக, பொருத்தப்பாடற்ற, நீதிக்குப்புறம்பான, சட்டவிரோத கட்டுமானங்கள் மற்றும் தனியார் காணி அபகரிப்புக்கள் போன்றன முற்றாக நிறுத்தப்படவேண்டும் என சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம் கோரிக்கை விடுத்துள்ளது.**

மக்களுக்குரிய காணியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டு வரும் தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பாக வடமாகாணத்தின் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இன மத சமத்துவத்தையும் மதங்களுக்கிடையிலான சகிப்புத்தன்மையையும் வளர்த்து பல்சமய கலாசாரத்தையும், நம்பிக்கையும் கொண்ட நாடாகக் கட்டியெழுப்பப்பட வேண்டிய நிலையில் அடக்குமுறையின் வடிவமாக, பொருத்தப்பாடற்ற, நீதிக்குப்புறம்பான, சட்டவிரோத கட்டுமானங்கள் மற்றும் தனியார் காணி அபகரிப்புக்கள் போன்றன முற்றாக நிறுத்தப்படவேண்டும் என பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன மத நல்லிணக்கத்தை வளர்த்து சமத்துவ உணர்வை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கமும் அரச அதிகாரத்தில் உள்ளவர்களும் செயற்பட வேண்டும் என்ற விடயம் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இன மத முரண்பாட்டை மீண்டும் ஏற்படுத்தாத வண்ணம் நீதி நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் விடுப்பதாகச் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

# வாகன விலை குறையலாம்!

கொழும்பு, பெப். 22

எதிர்பார்த்ததை விட வாகன இறக்குமதி தொடர்பான கேள்விகள் குறைவாக இருக்கும் பட்சத்தில், இலங்கை அரசாங்கம் வரிகளை குறைக்கும் முடிவை எடுக்கலாம் என பிரதி நிதியமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்தார்.

வெளிநாட்டு நாணயக் கையிருப்புகளை இழக்கும் அபாயம் நேரிடும் என்பதனை கருத்திற்கொண்டே இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும், அந்நியச் செலாவணியில் நிலவும் வரம்பு காரணமாக மத்திய வங்கி ஒரு வழிகாட்டுதலை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதன்படி, வாகன வரிகளை முதலில் அதிகரித்து விலையை கட்டுப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் பொருளாதார சூழ்நிலை மற்றும் அந்நியச் செலாவணி நிலைமையின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு வரிகளை மீண்டும் குறைக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வங்கிகளில் கடன் கடிதங்களைத் திறப்பதில் உள்ள ஆர்வம் இருந்தபோதிலும் அதில் அதிகரிப்பு இல்லை என்றும், வாகனம் தொடர்பான வரிகளில் சுமார் 700 பில்லியன் ரூபாய் வருமானம் கிடைக்கும் என்றும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், வாகன இறக்குமதி வரிகளை வெறும் வருவாய் திரட்டுவதற்காக மட்டுமே தளர்த்தப்படவில்லை என்பதுடன், இது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் துணை புரியும் எனவும், வரிகளை மீண்டும் பரிசீலனை செய்யும் திட்டமிடல்கள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும், பொருளாதார தேவைகளைக் கருத்தில் கொண்டு இறக்குமதி கட்டுப்பாடுகளில் மாற்றங்கள் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# யாழ்ப்பாணத்தில் சுகாதாரச் சீர்கேட்டுடன் கொத்து தயாரித்தவருக்கு ரூ.40,000 தண்டம்

## மற்றுமோர் உணவகத்துக்கு சீல்

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாணத்தில் சுகாதாரத்திற்கு கேடான முறையில் கொத்து றொட்டி தயாரித்த உரிமையாளருக்கு 40 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளதுடன், மற்றுமொரு கடைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை பகுதியில் அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரான ம.ஜெயப்பிரதீப் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது, சுகாதாரத்துக்கு கேடான முறையில் கொத்து தயாரித்த உணவக உரிமையாளருக்கும், மற்றுமொரு உணவகத்தில் மலசல கூடத்தினுள் மின் மோட்டாரை இயக்கி நீர் வழங்கி வந்த நபருக்கும் எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றபோது உரிமையாளர்கள் இருவரும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, சுகாதாரத்துக்கு கேடான முறையில் கொத்து தயாரித்த உரிமையாளருக்கு 40 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த மன்று, மலசல கூடத்தினுள் மின் மோட்டாரை இயக்கிய உரிமையாளருக்கு 28 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்ததுடன் கடையை சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதாரப் பரிசோதகருக்கு கட்டளையிட்டது.

நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் குறித்த உணவகம் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் சீல் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# எம்.பிக்களுக்கு ஏதும் நடந்தால் சபாநாயகரே முழுப் பொறுப்பு!

## தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 22

நாட்டின் பாதுகாப்பு ஆபத்தில் இருப்பதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராவது கொலை செய்யப்பட்டால், அதற்கு சபாநாயகர் பொறுப்பேற்க வேண்டும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் பாராளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏதாவது நடந்தால், சபாநாயகர் தான் பொறுப்பேற்க வேண்டும். நாட்டின் பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாவலர் சபாநாயகர். எனவே பாராளுமன்ற உறுப்பினர்களின் உயிருக்கு ஏதாவது நடந்தாலோ அல்லது அவர்கள் கொலை செய்யப்பட்டாலோ அவர் பொறுப்பேற்க வேண்டும்.

எங்களுக்கு பாதுகாப்பு தேவையில்லை. ஆனால், எந்த துப்பாக்கிச் சூட்டையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராக இல்லை - என்றார். (அ)

# பிரமிட் திட்ட மோசடி; டுபாயில் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 22

இலங்கையில் மோசடி பிரமிட் திட்ட தரவுத் தளத்தை நிர்வகித்த கயான் விக்ரமதிலக டுபாயில் கைது செய்யப்பட்டு நேற்றுக் காலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார்.

மோசடி பிரமிட் திட்டம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

பிரமிட் திட்டங்களில் ஈடுபட்டதற்காக 2023 ஒகஸ்ட்டில் இலங்கை மத்திய வங்கியால் தடை செய்யப்பட்ட 09 நிறுவனங்களில் 'ஒன்மக்ஸ் டிரி' அடங்குகின்றது.

குறித்த நிறுவனம் இலங்கையில் 100 மில்லியன் அமெரிக்க டொலர் பிரமிட் நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை கடந்த 2023 நவம்பர் இல், மோசடி பிரமிட் திட்டத்திற்காக 'ஒன்மக்ஸ் டிரி'யின் ஐந்து இயக்குநர்களும் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரயில் - யானை விபத்துகளை தடுக்க விசேட நடவடிக்கை

கொழும்பு, பெப். 22

காட்டு யானைகள் ரயில்களில் மோதுவதால் ஏற்படும் விபத்துகளைத் தடுக்க அவசர நடவடிக்கைகள் சிலவற்றை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்ஓயாவுக்கும் ஹிங்குரக்கொடைக்கும் இடையிலான 141ஆவது மைல்கல்லுக்கு அருகில் ரயிலில் மோதி ஆறு காட்டு யானைகள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாராளுமன்ற வளாகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரட்நாயக்க மற்றும் சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க படபெந்தி ஆகியோரின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

போக்குவரத்து, சுற்றுச்சூழல், டிஜிற்றல் அமைச்சுக்கள், ரயில்வே மற்றும் வனவிலங்கு திணைக்களம் மற்றும் குறித்த நிறுவனங்களின் உயரதிகாரிகள், பல்வேறு சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைப்புகள் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டன.

காட்டு யானை விபத்துக்கள் அதிகமாக நடைபெறும் பகுதியில் ரயில் தண்டவாளங்களை மேலும் தெரியும்படி செய்வதிலும், டிஜிற்றல் தொழில்நுட்பம் உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ரயிலின் முன்னும் பின்னும் விளக்கு அமைப்புகளை நிறுவுவது, மஞ்சள் விளக்குகளுக்குப் பதிலாக வெள்ளை விளக்குகளைப் பயன்படுத்துவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், கலந்துரையாடலின் இரண்டாம் கட்டமாக, அனைத்து தரப்பினரும் இன்று சனிக்கிழமை விபத்து நடந்த இடத்திற்குச் சென்று விரிவான ஆய்வு நடத்தி, குறித்த தீர்மானங்கள் மற்றும் செயல்படுத்த வேண்டிய வேறு ஏதேனும் தீர்மானங்கள் இருந்தால் அவற்றையும் செயற்படுத்த திட்டமிட்டுள்ளனர். (அ)

# அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, பெப். 22

பாராளுமன்ற சிறப்புரிமை குழு, பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மீது நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுன மீதான முறைப்பாடுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, சிறப்புரிமைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்று சபாநாயகர் தெரிவித்தார்.

அர்ச்சுனா மீதான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்த மூன்று பேர் கொண்ட குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹேமாலி வீரசேகர, விஜித ஹேரத் மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பூஸா சிறைச்சாலையில் தொலைபேசிகள் மீட்பு!

கொழும்பு, பெப். 22

பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் சிறப்புப் பிரிவு கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள அறையில் தொலைபேசிகள் ஒன்றும் மற்றும் பல சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக சிறப்பு அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

சிறப்பு அதிரடிப் படைக் குழுவினர், உயர் பாதுகாப்பு சிறைச்சாலையின் பிரிவு டியின் 83ஆவது அறைக்குள் இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களில் ஒரு நவீன தொலைபேசி, ஒரு கேபிள், ஒரு சிம் கார்ட், ஒரு பற்றரி சார்ஜர் மற்றும் அடையாளம் காணப்படாத அளவு போதைப்பொருள் ஆகியவை அடங்கும் என்று சிறப்புப் பணிக்குழு தெரிவித்துள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் சிறை நிர்வாக அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org